விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 13 புதன்கிழமை (29.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 222




# எந்த வரையறையிலும் நாட்டை பிரிக்க முடியாது

## ஜனாதிபதி திட்டவட்டம்

(கிளிநொச்சி)

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற பிரிவுகள் இருப்பது வரைபடத்தில் மட்டுமேயாகும் என்றும், இந்த நாட்டை ஒரே நாடாக எண்ணி எல்லோரும் செயற்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். எந்த வகையிலும் சட்டத்தின் மூலமோ அல்லது எல்லைகள் மூலமோ நாட்டை பிரித்து வேறுபடுத்த முடியாது என ஜனாதிபதி தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)




## யாழ்.விருது - 2015 பேராசிரியர் தேவராஜாவுக்கு

### யாழ்.மாநகர ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு வருடந்தோறும் வழங்கும் யாழ்.விருது இம்முறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜா அவர்களுக்கு

24 ஆம் பக்கம் பார்க்க



## தபால் திணைக்களத்திடம் இன்று வாக்காளர் அட்டை கையளிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இன்று தபால் திணைக்களத்திடம் கையளிக்கவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முறை தேர்தலுக்காக ஒருகோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 491 வாக்காளர் அட்டைகள் கையளிக்கப்படவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

தபால் ஊழியர்கள் ஓகஸ்ட் 10 ஆம் திகதி வரை வீடுகள் தோறும் சென்று வாக்காளர்

24 ஆம் பக்கம் பார்க்க













நடுவுநிலை தவறா ... உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல் குறித்து நீதிமன்ற விசாரணை அவசியம்

## சர்வதேச அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் சட்டவிரோத தடுத்து வைப்பு போன்ற சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காது விட்டால், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதில் சர்வதேச சமூகம் தோல்வியடையும் என்று இலங்கையில உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னரும் சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் சட்டவிரோத தடுத்து வைப்பு போன்ற வழிகளில் தமிழ் மக்கள் மீது அரசாங்க அதிகாரிகளால் திட்டமிடப்பட்ட துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கை, இதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்காக ஐ.நா பாதுகாப்புச் சபை பரிந்துரைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மனித வுரிமைகள் நிபுணர் யஸ்மின் சூகாவின் தலைமையிலான இலங்கையின் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் என்ற அமைப்பினால் முடிவுறாத ஒரு போர்: இலங்கையில் சித்திரவதைகளும், பாலியல் வன்முறைகளும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


## பெயர் மாற்றம்

தூண்டாய் வடக்கு உப்புமாவெளி முல்லைத்தீவை வசிப்பிடமாகக் கொண்ட லோகநாதன் தாசன் ஆகிய எனது இப்பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் மட்டுமே தாசன் என பதியப்பட்டுள்ளது. ஏனைய ஆவணங்கள் அனைத்திலும் **பிரியதர்சன்** எனப் பதிவில் உள்ளதாலும் பாவனையில் நான் ஒப்பமிடுவதாலும் எனது பெயரை இன்றிலிருந்து **பிரியதர்சன்** என மாற்றிக் கொள்கிறேன் என்பதனை இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

**இப்படிக்கு உண்மையுள்ள**
**லோகநாதன் பிரியதர்சன்**
(236)

NORTH LEAD
Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing.

## கண்காணிப்பு கமெராக்கள் விசேட விலையில்



4Channel Full Set: 37850/=
8Channel Full Set: 57250/=
12Channel Full Set: 96500/=
Camera Starting From: 3750/=
AHD Camera & DVR Available

**உங்கள் வீடுகள் மற்றும் வியாபார ஸ்தலங்களின் பாதுகாப்பினை கண்காணிக்க குறைந்த செலவில் கூடிய உத்தரவாதத்துடன் ஒரே நாளில் பொருத்தி தருகின்றோம். உங்கள் கமெராக்களை நீங்களே பரிசோதித்து நம்பிக்கையை உறுதி செய்யுங்கள்**
**சகல கண்காணிப்பு கமெரா உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்**

# 1-2 Years Warranty For Camera, DVR, HDD & LED
# Currency & Number Plate Viewing Ability
# Free Mobile View & Online Setting
# 100% After Service

எமது சேவை வடமாகாணம் முழுவதும்

**North Lead CCTV Security System**

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390


# ஐவரின் அங்கத்துவத்தை நீக்கினார் ஜனாதிபதி!



(கொழும்பு)

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிடும், நான்கு அமைச்சர்கள் உள்ளிட்ட ஐந்து பேரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தியுள்ளார்.

அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, எம். கே. டி.எஸ்.குணவர்த்தன, எஸ்.பி.நாவின்ன, அர்ஜுன ரணதுங்க மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகிய ஐந்து பேருமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில், இவர்களின் உறுப்புரிமையை மைத்திரிபால சிறிசேன இடைநிறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட அனுமதிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இவர்கள் ஐந்து பேரும், நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ரணில்தான் பிரதமர்




பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 120 ஆசனங்களை பெற்றுக்கொள்ளும என சோதிடர் கே.ஏ.யூ.சரத் சந்திர தெரிவித்துள்ளார்.இம்முறை அவர் குறிப்பிட்டதாவது,

ரணில் விக்கிரமசிங்கவே ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னரான அரசாங்கத்தின் பிரதமர். இதற்கு 03 மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தியிருந்தால் கூட்டணிக்கு சாதகமாக அமைந்திருக்கும்.

எதிர்வரும் காலம் மகிந்த ராஜபக்ஷவுக்கு கெட்ட காலம் எனவும், இனி ஒரு போதும் அவரால் பிரதமராக முடியாது. அவர பிரதமர் வேட்பாளராகும் கட்சி அவரால் தோல்வியடையும்.

தேர்தலின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல வழக்குகளை சந்திக்க நேரிடும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# புங்குடுதீவில் சனியன்று இரத்ததான முகாம்




(புங்குடுதீவு)

நல்லூர் றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் முதலாம் திகதி புங்குடுதீவில் மாபெரும் இரத்ததான முகாம் இடம் பெறவுள்ளது.

அன்று காலை 9 மணி தொடக்கம் புங்குடுதீவு பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இவ் இரத்ததான முகாம் இடம் பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்த வகைகளுக்கான தட்டுப்பாடுகளை அடுத்து புங்குடுதீவு இளைஞர் கழகத்தினால் இவ் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் இரத்ததான முகாமில் கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு புங்குடுதீவு இளைஞர் யுவதிகளுக்கு புங்குடுதீவு இளைஞர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. (எ)


**6 மாதங்களில் வெளிநாட்டு விசா & தொழில் ஏற்பாட்டுடன்**

SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams

Business & Hotel Management

புதிய பிரிவு ஆரம்பம் - செவ்வாய், வியாழன் 10.00 am
Call:077 36 16 798
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம் :- 10
**ஆதன இலக்கம் :- 5/30 வேலக்கை பிள்ளையார் கோவில் றோட்**

வட்டாரம் 10 வேலக்கை பிள்ளையார் கோவில் றோட், ஆதன இலக்கம் 5/30 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவில் பற்று நவாலி இறை "பிச்சி தோட்டம் வளவு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 2/10 கொண்ட இவ்வாதனமானது கொழும்பைச் சேர்ந்த தற்பொழுது இங்கிலாந்தில் வசிக்கும் தியாகராஜா சண்முகானந்தன், கொழும்பில் வசிக்கும் தியாகராஜா யோகராஜன், தியாகராஜா அரசநாயகம், தியாகராஜா வன்னியசிங்கம், சரவணமுத்து தியாகராஜா கைம்பெண் தையல்நாயகி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் நவாலியைச் சேர்ந்த முருகன் பரமானந்தமும் பெண் மேரிமனோகரதேவியும் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.E.முருகேசம்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 1713 ஆம் இலக்க 26.02.1941 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "பிச்சிதோட்டம்" நிலப்பரப்பு 03குளி 2/10 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனம் முருகன் பரமானந்தம் உம் பெண் மேரிமனோகரதேவி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**


## 787 நேரக் கணிப்பாளர்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம்

எமது 787 சிற்றூர்தீச் சேவைச் சங்கத்திற்கு நேரக் கணிப்பாளர்கள் தேவையாக இருப்பதினால் சேவையில் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்கள், தனியார் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் செயலாளர் கருணாகரன் 787 சிற்றூர்தி சேவைச் சங்கம், மாதகல் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். அரச உத்தியோகஸ்தர், தனியார் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

**தலைவர்,**
**மாதகல் தனியார்**
**சிற்றூர்திச் சங்கம் 787.**
(1251)


# மண்டைதீவு அம்மனுக்கு நாளை தேர்த்திருவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் தேர்த்திருவிழா நாளை வியாழக் கிழமை இடம்பெறும்.

காலை 8 மணியளவில் வசந்தமண்டப பூசை நடைபெற்று சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.

நாளை மறுதினம் தீர்த்தோற்சவம் இடம் பெறும். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## சாட்சிப் பாதுகாப்பில்

## இலங்கை முன்னேற்றம்

## அமெரிக்கா தெரிவிப்பு

(நியூயோர்க்)

**மனிதக்கடத்தல் தொடர்பான சாட்சிகள் பாதுகாப்பு விடயத்தில் இலங்கை அரசாங்கம் வரையறுக்கப்பட்ட முன்னேற்றத்தை கண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் 2014 ஆம் ஆண்டுக்கான மனிதக் கடத்தல் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது**

அமெரிக்காவின் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயக மற்றும் மனித உரிமைகளுக்கான பிரதிச் செயலாளர் சாரா செவால் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இதில் ஏனைய நாடுகளுக்கு மனிதக்கடத்தல்களை மேற்கொள்ளும் குற்றத்துக்காக எந்தவொரு அதிகாரி மீது குற்றச்சாட்டோ அல்லது விசாரணையோ முன்னெடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கப்பம் பெற்றுக்கொண்டு விபச்சார விடுதிகளுக்கு அனுமதியளித்தல், போலி ஆவணங்களுடன் அரசியல் ரீதியாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு ஆட்களை அனுப்புதல் போன்றவை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் சிறுவர் தேசிய பாதுகாப்பு அதிகாரசபையின் அறிக்கைப்படி இந்த வருடத்தில் மனிதக் கடத்தல் தொடர்பில் 29 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, மனிதக் கடத்தல் சம்பவங்களில் பாதிக்கப்படும் பெண்களுக்கு விசேட கவனிப்பு சேவைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (எ-11)

## யாழ் வந்தார் நேற்று ஜனாதிபதி மைத்திரி



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்

23ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனோர் குறித்து விசாரிக்க ஐவர் கொண்ட குழு

(கொழும்பு)

காணாமற்போனவர்கள் தொடரபான விசாரணைகளை மேற்கொள்வதற்கு, ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு அறிவித்துள்ளது.

காணாமற்போனவர்கள் தொடரபாக அவர்களின் உறவினர்கள், ஆணைக்குழுவின் அமர்வுகளில் வாய்மூலம் அளித்த சாட்சியங்களின அடிப்படையிலேயே, மூத்த அனுபவம் மிக்க அதிகாரிகளைக் கொண்ட இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட, மேலதிகமாக ஆழமாக விசாரிக்கப்பட வேண்டிய

23ஆம் பக்கம் பார்க்க....

## மீளக்குடியேறியோரின் விபரம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தற்காலிக வீடுகள் அமைத்து தங்கவுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக குடும்பங்களின் விபரங்களை தருமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேறுவதற்காக ஆயிரத்து நூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

அவர்களில் முதற்கட்டமாக 170 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் ஒருலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அங்கு தங்கவுள்ள குடும்பங்களுக்கு உலக உணவு திட்டத்தின் கீழ் 6 மாத காலங்களுக்கு நிவாரணம்

23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகள் வீசிய குண்டு கட்டுநாயக்கவில் மீட்பு

(கொழும்பு)


கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் உள்ள விமானப்படைத் தளத்தில் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த குண்டு, கடந்த 2009ஆம ஆண்டு தமிழீழ விடுதலை புலிகளினால் வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த வெடிகுண்டு 50 கிலோ எடையுடையது எனவும் வடிகால் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் சிலரே இவ் வெடிகுண்டைக் கண்டெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தின் வான் படை வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் அதிகாரிகளிடம் இவ் வெடிகுண்டு கையளிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## அப்துல் கலாமுக்கு ஜனாதிபதி அனுதாபம்



(கொழும்பு)

இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் மறைவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

கலாநிதி அப்துல் கலாம் போன்றதோர் தலைசிறந்த மேதை மறைந்தது பாரத தேசத்துக்கு மட்டுமல்ல அறிவால் நிறைந்த முழு உலகத்துக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அப்துல் கலாம், இந்தியாவை

23ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்புப் பிரிவினர் பாதணிகளுடன் ஆலயத்துள்!



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் காலணிகளுடன் ஆலயத்துக்குள் சென்றதால் பொது மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கைலாச பிள்ளையார் ஆலயத்தில் வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக வருகை தந்திருந்த ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினை சேர்ந்த மூவர் ஆலயத்துக்குள் கால

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அங்கஜன்தான் எனது பிரதிநிதி நேரில் யாழ். வந்து உறுதிப்படுத்தினார் ஜனாதிபதி












**அங்கஜன் இராமநாதன்**

**MBA (International) B.Eng (Hons)**

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்
மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)



அங்கஜனின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை கைலாசப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை பிரார்த்தனையிலும் மற்றும் அங்கஜனின் இல்லத்திற்கு வந்த ஜனாதிபதி மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்...

(C-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எந்தப் பரம்பரை சொத்தும் இல்லை நான் எதையும் சம்பாதிக்கவுமில்லை

ஆவுல் பக்கீர் ஜெயுனுல்லா புதீன் அப்துல் கலாம். இதுதான் கலாமின் முழுப் பெயர். ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி 1931 ஆண்டு இராமேஸ்வரத்தில் பிறந்தார். தந்தை ஜெயுனுல்லா புதீன், தாய் ஆஷியம்மா. தந்தையார் படகு கட்டும் தொழில் செய்துவந்தார். கலாம் படிக்கும் காலத்தில் செய்தித்தாள் போட்டும், புளியங்கொட்டை விற்றும் வீட்டுக்கு உதவினார். நேர்மையான பண்பை தன் அப்பாவிடம் இருந்து பெற்றதாகச் சிலாகிப்பார் கலாம்.

உயர்நிலைக் கல்வியை முடித்த பின், திருச்சியில் ஒரு கல்லூரியில் இயற்பியல் துறையில் பயின்றார். எம்.ஐ.டி. பொறியியல் கல்லூரியில் ஏரோனாடிக்கல் பொறியியல் துறையில் இடம் கிடைத்து, பணம் கட்ட முடியாமல் இருந்தபொழுது இவரின் சகோதரிதான் நகைகளைக் கொடுத்து படிக்க அனுப்பினார். கல்லூரி வந்த சில நாட்களிலேயே, தொழிலில் ஏற்பட்ட பாதிப்பில் அப்பா, திரும்ப ஊருக்கு வரச்சொல்லியதால் தன் புத்தகங்களை எடைக்குப் போட்டுப் பணம் திரட்டப் போன இடத்தில் புத்தகங்களை வாங்காமல் பணத்தை மட்டும்கொடுத்து மேலே படிக்கச் சொன்ன பேப்பர்காரரை இன்னமும் நன்றியோடு குறிப்பிடுவார் கலாம்.

கல்லூரியில் உணவுச் செலவை குறைக்கச் சைவத்துக்கு மாறினார். அதுவே இப்போதும் தொடர்கிறது. பொறியியல் கல்வியை முடித்ததும் விமானி ஆகவே ஆசை ப்பட்டார். ஆனால், ஓர் இடம் பின் தங்கி வாய்ப்பை இழந்தார். கண்ணீரோடு நின்ற வரை சுவாமி சிவானந்தரின் "இதைவிடப் பெரிதான ஒன்றுக்காக நீ அனுப்பப்பட்டு இருக்கிறாய்" என்ற வரிகள் உத்வேகப்படுத்தின.

விக்ரம் சாராபாயின் ஊக்கத்தில் இந்திய விண்வெளிக் கழகத்தில் இணைந்தார். அங்கேதான் முதல் சுதேசி விண்கலமான எஸ்.எல்.வியை உருவாக்கினார். அதைத் தொடர்ந்து ரோகினி, திரிசூல், ப்ரித்வி, ஆகாஷ் என இந்தியாவின் விஞ்ஞான வலிமையை உலகுக்கு உரக்கச் சொல்லும் ஏவுகணைகளை உருவாக்கி 'இந்தியாவின் ஏவுகணைத் தொழில்நுட்பத் தந்தை' என அழைக்கப்பட்டார். புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் அதிகம். திருக்குறள், குரான் எப்பொழுதும் உடன் இருக்கும். எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பாடல்கள் பிடிக்கும். வீணை வாசிக்கவும் கற்றுக் கொண்டார். பிடித்த நிறம் கருநீலம். ஆடைகள் அதே நிறத்தில் இருக்கும். எளிமையான ஆடைகளையே அணிவார். எஸ்.எல்.வி-3 வெற்றிக்குப் பிறகு இந்திரா காந்தி, கலாமைச் சந்திக்க நினைத்தார். அப்பொழுது "என்னிடம் நல்ல ஆடைகளே இல்லையே" எனக் கலாம் சொல்ல, "வெற்றி என்கிற அழகான ஆடையை அணிந்து இருக்கிறீர்கள்!' என மூத்த விஞ்ஞானி சதீஷ் தவான் சொன்னார்.



இந்தியா முழுக்க மாணவர்களைச் சந்திப்பதிலும் பாடம் நடத்துவதிலும் தன் நேரத்தை செலவழித்து வந்தார். தன்னிடம் அற்புதமான ஒரு கேள்வி கேட்டதற்காகத் தமிழ்நாட்டு சுட்டி ஒருவரை டில்லி வரை அழைத்து மரியாதை செய்தார்.

ஜனாதிபதியாக இருந்த போது, ராஷ்ட்ரபதி பவனில் இருக்கும் மொகல் தோட்டத்தை மக்கள் பார்வைக்குத் திறந்துவிட்டார். தன் பதவி ஏற்பு விழாவுக்குச் சுட்டிகளை வரவழைத்தார். பதவிக் காலம் முடிந்து வெளியேறும்போது எந்தப் பரிசுப் பொருளையும்எடுத்து செல்லவில்லை. இரண்டே சூட்கேஸ்களில் அவரின் அத்தனை உடைமைகளும்அடங்கி விட்டன. தன் உறவினர்கள் டில்லி வந்து தங்கிய போது அதற்கான செலவை ஜனாதிபதிமாளிகை கணக்கில் வைக்காமல் தானே செலுத்தினார்.

இந்தியாவின் உயரிய கௌரவமாகக் கருதப்படும் பாரத ரத்னா விருது பெற்றவர். ஐதராபாத் நிம்ஸ் வைத்தியசாலையில் கிலோ கணக்கில் செயற்கை கால் களை அணிந்துகொண்டு இருந்த சுட்டிகளுக்கு வெறும் 400 கிராம் எடையில் செயற்கை கால்களை வடிவமைத்துத் தந்தார்.

தான் எழுதிய அக்னிச் சிறகுகள் நூலில் என் கதை என்னோடு முடிந்துவிடும். உலக வழக்கப்படி எனக்கு எந்தப் பரம்பரை சொத்தும் இல்லை. நான் எதையும் சம்பாதிக்கவில்லை. எதையும் கட்டிவைக்கவில்லை, என்னை மற்றவர்கள் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என நான் விரும்பவில்லை. என் கதையால் சில ஆத்மாக்களாவது உத்வேகம் பெறக்கூடும் என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

# சரித்திரமாகிவிட்டார் அப்துல்கலாம்

இன்றைய இலட்சிய இளைஞர்களின் கதாநாயகர்களில் ஒருவரும், "இளைஞர்களே! கனவு காணுங்கள் "என்ற அறைகூவலுக்குச் சொந்தக்காரரும், தனது தாய் நாட்டை உலக அரங்கிலே உயர்த்தி வைத்தவரும், மிகச் சிறந்த கல்விமான், விஞ்ஞானி, கவிஞன், எதிர்க்கட்சியினராற் கூட ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனாதிபதியானவருமானமாமேதை ஆவுல் பக்கீர் ஜெயுனுல்லா புதீன் அப்துல் கலாம் சரித்திரமாகிவிட்டார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்திலே 15.10.1931,இல் ஏழைத் தமிழ் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தார். கல்வி பயிலும் காலத்திலே பத்திரிகை விற்று அதனால் கிடைக்கும் வருமானத்தில் குடும்பத்திற்கு தன்னாலானளவு உதவினார்.

கல்வியிலே மிகவும் ஆர்வம் கொண்டு நன்றாகக் கற்று, வான்வெளிப் பொறியியல் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர்.

### தோல்விகளை வெற்றியின் படிக்கட்டுக்கள் ஆக்கியவர்

அவரது விருப்பத்துக்குரிய யுத்த விமானியாகும் கனவு மிகச்சொற்ப இடைவெளியில் கை நழுவிப் போனது. ஆனாலும் அவர் சோர்ந்து விடவில்லை. பாதுகாப்புப் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையில் வான்வெளி சம்பந்தமான ஆராய்ச்சிப்பிரிவில் தன்னை ஒரு விஞ்ஞானியாக இணைத்துக்கொண்டார். படிப்படியாக, வான்வெளிக்குத் துணைக் கோளினை ஏவும் செயற்றிட்டத்திற்கான தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதே மாதம் 1980 ஆம் ஆண்டு உலகே வியக்கும்வண்ணம்வெற்றிகரமாக "ரோகிணி"எனும்துணைக் கோளினை உலகப்பாதையில் வலம் வரச் செய்தார்.

இது பற்றி அவர் குறிப்பிடுகையில் "பல கோடி செலவில் இந்தியா முதல் முறையாக ஒரு துணைக்கோளை





விண்ணிற்கு ஏவும் அந்தத் தருணம். அனைவரும் ஆவலோடு காத்திருக்கின்றனர். இதயம் துடிப்பது எமது செவிகளுக்குக் கேட்கிறது. செயற்கைக்கோள் விண்ணில் பாய்கிறது. அந்தோ! ஒரு சில நிமிடங்களில் வெடித்துச் சிதறுகிறது. அதிர்ந்து போகிறேன். தொழில்நுட்பக்கோளாறு. பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்படுகிறது. கேள்விக் கணைகள் சரமாரியாகத் என்மீது தொடுக்கப்படுகிறன. தோல்வி அவமானம் குறுகிப்போகிறேன். அப்பொழுது ஒலிவாங்கியினை எனது தலைவர் தன்னை நோக்கி நகர்த்துகிறார். தவறுகளிற்குப் பொறுப்பேற்கிறார். மீண்டும் கடும் முயற்சி. நித்திரையற்ற இரவுகள் பல. அனைத்துத் தவறுகளும் திருத்தப்பட்டு விட்டன. "ரோகிணி" வெற்றி கரமாக விண்ணிற்கு ஏவப்படுகிறது. வானைப்பிளக்கும் கரகோசம். மீண்டும் பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்படுகிறது. ஆனால், இம்முறை என்னையே பேசும்படி தலைவர் கூறுகிறார். எனது கண்கள் பனிக்கின்றன. அண்டங்கள் அனைத்தையும் கடந்து உயர்ந்து தெரிகிறார்".

இவ்வாறு எத்தனை தலைவர்கள் எம்மிடம் உள்ளனர்?

இன்றைய தலைவர்களே! நாளைய தலைவர்களான இளைஞர்களே! வெற்றிகளுக்காக மார்தட்டிக் கொள்ளும் அதேவேளை அவ் வெற்றிக்குக் காரணமானவர்களை மனந் திறந்துபாராட்டத் தயங்காதீர்கள். தோல்விகளிற்காக மற்றையவர்களையோ சந்தர்ப்பங்களையோ சாட்டுவதைவிடுத்து, பொறுப்பினை ஏற்று அதிலிருந்து பாடத்தினை கற்றுக் கொள்வோம்.

### கனவு காணச் சொன்னவர்

இப்பந்தியினை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பான வாசகர்களே! உங்களுக்கென ஒரு சொந்தக் கனவு உள்ளதா? மற்றவர்களுக்காகவன்றி உங்களுக்கான கனவு. "நல்ல உறக்கத்தில் காண்பதல்ல நான் கூறும் கனவு உறங்கவிடாது செய்வது"என்று கூறியவர் அப்துல்கலாம்.

இதனையே உலகப் புகழ் பெற்ற சுய ஊக்க எழுத்தாளர் நெப்போலியன்ஹில் "கொழுந்து விட்டெரியும் அதீத ஆர்வம் (burning desire)"என்கிறார்.

சிறு வயது முதலே இயற்கை மீதுஅதீத ஆர்வம் கொண்ட அப்துல்கலாம் இராமேஸ்வரம் கடற்கரையில் தனது அதிக நேரத்தினைச் செலவிடுவது வழக்கம் அங்கே எழுந்து பறக்கும் நாரைகள் அவரது கவனத்தை ஈர்த்துள்ளன. தானும் அவ்வாறு பறக்கவேண்டும் என்ற கனவு அவரது மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. அக்கனவினை மீண்டும் மீண்டும் தனது மனத்திரையில் படமாக ஓடிப் பார்த்துள்ளார். நாளடைவில் அதுவே அவரது கொழுந்து விட்டெரியும் அதீத ஆர்வமாக மாறியுள்ளது. அதுவே அவரது பிடரியில் உந்திஅவரைஇவ்வுயர் நிலைக்கு உயர்த்தியது என்றால் மிகையாகாது.

"பல்வேறு தடைகள் ஏற்படலாம். ஆனால், எப்பாடுபட்டாவது உங்கள் கனவினைப் பாதுகாருங்கள்" என்று தனது அனுபவத்தினூடான யதார்த்த உண்மையினை இளைஞர்களுக்கு அறிவுரையாகக் கூறியவர்.

அன்பான வாசகர்களே! இன்றைய தினத்தினை ஒரு சுயபரிசோதனை நாளாகப் பிரகடனப்படுத்துவோம். எமது கனவினைக் கண்டு பிடிப்போம். ஒரு சிலர் ஏற்கனவே கண்டு பிடித்திருக் கக் கூடும். நித்திரைக்குச் செல்லுமுன் 20 நிமிடத்தை இம்முயற்சிக்காக ஒதுக்குவோம். இலத்திரனியல் சாதனங்கள் அனைத்தையும் நிறுத்தி வைப்போம். தேவையற்ற எண்ணங்களை ஒதுக்கி வைப்போம். நான்கைந்து தடவைகள் மூச்சினை மிக ஆழமாக உள்ளிழுத்து மிக மெதுவாக வெளி விடுவோம். இன்னும் 3 வருடத்தில் நான் எப்படியானவனாக அல்லது எப்படியானவளாக இருப்பேன் என தெளிவாக எண்ணிப்பாருங்கள். பெரும்பாலும் விடை கிடைக்காது போகும் குழப்பமாக இருக்கும். மீண்டும் மூச்சினை ஆழமாக உள்ளிழுத்து மெதுவாக வெளிவிட்ட வாறு, முயற்சிக்கவும். உங் களுக்குள் ஆழ ஊடுருவி "அந்த உங்களைத்தேடுங்கள். முடியவில்லையா? மன தினை அதிக கடினப்படுத்த வேண்டாம். நாளை அதி காலை முயற்சிக்கவும். முடியவில்லையா? நாளை இரவு முயற்சிக்கவும். ஒரு சில நாட்களில் உங்கள் தெளிவான கனவினைக் கண்டுபிடித்து விடலாம். பிறகென்ன உங்கள் உங்கள் துறையில் நீங்களும் ஓர் அப்துல்கலாமே!

Dr.கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எந்த தேர்தலிலும் யாருக்கும் வாக்களிக்கவே போவதில்லை

## காணாமற் போனவர்களின் உறவினர்கள் கடும் எதிர்ப்பு

காணாமற் போன உறவுகள் மீட்கப்படும் வரையில் நடைபெறவிருக்கின்ற பொதுத் தேர்தல் உட்பட தொடர்ந்து நடைபெறுகின்ற எந்தத் தேர்தலிலும் யாருக்கும் வாக்களிக்கப் போவதில்லை என நல்லூரில் இடம் பெற்ற போராட்டத்தில் காணாமற்போனவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.



இந்தப் போராட்டத்தின் போது கடந்த அரசின் மீதும் ஆட்சிக்கு வந்த புதிய அரசின் மீதும் சரமாரியான குற்றச் சாட்டுக்களை முன்வைத்த காணாமற் போனவர்களது உறவுகள் தேர்தல் காலத்தில் மட்டும் எம்மைத் தேடித் தேடி வருகின்ற அரசியல் வாதிகள தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் எமக்காக எதனைச் செய்கின்றனர் என்றும் கேள்வியெழுப்பினர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய முன்றிலில் நேற்றுக் காலை ஒன்று திரண்ட காணாமற் போனவர்களது உறவுகள் தமது உறவுகளைமீகவேண்டி வழிபாட்டில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து உறவுகள் எங்கே, எங்கே எனக் கேள்வியெழுப்பியவாறு அவர்களை மீட்டுத்தரக்கோரி ஆலய முன்றிலில் கோசம் எழுப்பினர்.

இதன் போது சமூகத்தில் முகங்கொடுக்க முடியாமல் தவிக்குழ் இளம் தாய்மார்கள் நாம் எமது கணவர்கள் எங்கே, காணாமல் ஆக்கப்பட்டவர்களை இப்போதாவது சற்றுத் திரும்பிப் பார் அரசே, தேர்தல் காலத்தில் மட்டும் நாங்களும் மற்றவர்களும் சமமாகத் தெரிகின்றோம், தமிழ் அரச அதிபர்களே எமது உறவுகளை எம்மிடம் மீட்டுத் தாருங்கள்.

நல்லாட்சி இருக்கும் நாட்டில் நாமும் நலமாய் இருக்க வேண்டும். ஏன் எமக்கு இந்த நிலைமை, நல்லூரான் வீதியில் பிள்ளைகளை இழந்து தவிக்கும் எங்களுக்கு நல்வழி காட்ட யார் இங்கு வருவர், நம்பி வாழ்ந்து வெம்பி அழுகின்றோம், நலமின்றி வாழும் எங்களுக்கு நல்லூர்க் கந்தனே அருள் புரிவாயா,

வேலியே பயிரை மேய்ந்ததா? எங்கள் வேதனையெலலாம் உங்களுக்கு மகிழ்ச்சியா, யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்தும் எமது உறவுகளை காணாது தவிக்கின்றோம். பெண்கள் நாட்டின் கண்கள் என்றால் அந்தப் பெண்கள் கண்ணீர் சிந்தினால்நாடு வளம்பெறுமா? உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்தப் பேராட்டத்தில் கலந்து கொண்ட உறவுகள் நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டுள்ளது, அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என்றெல்லாம் கூறப்படுகின்றது. ஆனால் பல வருடக் கணக்காக எமது உறவுகளைக் காணாது தினந்தினம் நாம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஏங்களின் துயர் துடைப்பதற்கு எந்த அரசியல் வாதியும் முன்வரவில்லை.

நாம் எங்கள் உறவுகளைத் தொலைத்தும் யாருமற்ற அநாதைகளாகவே பெரும கஷ்ட துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின் றோம். குடும்பத் தலைவனின்றி பெற்ற பிள்ளையின்றி நாம் படும் துன்பத்தை யாரறிவார்? எமது உறவுகள் எங்கிருக்கின்றார்கள் என்று தெரியாத நிலையில் நாம் யாருக்காக எதற்காக வாக்களிக்க வேண்டும். இதுவரை காலமும் நாம் வாக்களித்தவர்கள் எமக்காக என்ன செய்தார்கள். இனியும் நாம் ஏமாறத் தயாரில்லை என கண்ணீருடன் தெரிவித்தனர். (இ-4)

## கட்டடத்தொகுதி அமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் நகராட்சிமன்றத்திற்குட்பட்ட சுகாதாரத் தொழிலாளர்களுக்காக சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள உதய சூரியன் குடியிருப்பில் முதலாம் கட்டமாக 5 விடுதிகள் கொண்ட கட்டத் தொகுதி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கான கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நகராட்சி மன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கென வடிவமைக்கப்பட்ட உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஆரம்ப நிகழ்வும் நடைபெறவுள்ளது. (இ-5-29)

## விளையாட்டுப் போட்டி

பண்டத்தரிப்பு பிரான்பற்று மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பாலர் பாடசாலையில் முன்பள்ளி முகாமைத்துவ குழுத் தலைவர் பா. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரும் சமாதான நீதவானுமாகிய கு.வரதராசா கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# இந்து ஆராய்ச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் இந்து ஆராய்ச்சி மாநாடு நாளை மறுதினம் 31 ஆம் திகதி முதல் ஆவணி மாதம் 2 ஆம் திகதி வரை நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஈழத்து இந்து மதத்தின் வரலாற்று வளர்ச்சிப்போக்கு எனும் தொனிப்பொருளில் காலை மாலை என இரு அமர்வாக இந்து ஆராய்ச்சி மாநாடு இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அரங்கு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தகைசார் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் கலந்து கொள்கிறார்.

இந்தியா தருமபுர ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ தாணு மகா தேவக் குருக்கள், சைவக்குருமார் ஒன்றிய முதல்வர் சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்கள், நல்லூர் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் ஆகியோர்கலந்துகொண்டு ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.

இதன்போது வரவேற்புரையினையும் அறிமுகவுரையினையும் மாநாட்டு ஒழுங்கு ஆலோசகர் பேராசிரியர் அ.சண்முகதாஸ்வழங்குவதுடன், வாழ்த்துரையை பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக் கழகம் தகைமைசார் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் தி.பத்மநாதன் வழங்குகின்றார்.

அத்துடன் மாநாட்டுச் சிறப்பு இதழாக இந்து ஒளி நூல் வெளியிடப்படவுள்ளது. நூல் வெளியீட்டுரையினை யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராசா வழங்கவுள்ளார்.

அத்துடன் சிறப்புச் சொற்பொழிவுகளை யாழ்.பல்கலைக்கழக தகைமைசார் தமிழ்ப்பேராசிரியர் அ.சண்முகதாஸ், அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும் நல்லூர் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர்வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வாக காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.45 மணி வரை 3 சமகால அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் சேர்.பொன். இராமநாதன் அரங்கில் நடைபெறவுள்ள அமர்வில் ஈழத்து இந்து சமய வரலாற்றில் புராணங்கள், திருமுறைகள் எனும் தலைப்பில் முதல் அமர்வும் வே.பாலசுப்பிரமணியம் அரங்கில் நடைபெறவுள்ள அமர்வில் ஈழநாட்டில் இந்து மத வளர்ச்சிக்கான எதிர்காலத்திட்டங்கள் எனும் தலைப்பில் இரண்டாவது அமர்வும் சேர்.பொன். அருணாச்சலம் அரங்கில் நடைபெறவுள்ள அமர்வில் இலங்கை இந்து மத வரலாறும் தொல்லியலும் எனும் தலைப்பில் மூன்றாவது அமர்வும் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ள அரங்குகளில் சேர் கந்தையா வைத்தியநாதன் அரங்கில் ஈழத்துத் திருக் கோயில்களும் மரபுகளும் எனும் தலைப்பில் 4 ஆவது அமர்வும் கலாநிதி க.வேலாயுதபிள்ளை அரங்கில் ஈழத்து இந்து சமய நிறுவணங்களின் பணிகள் அவை ஏற்படுத்திய- ஏற்படுத்தும்தாக்கங்கள் எனும் தலைப்பில் ஐந்தாவது அமர்வும் இந்து போர்ட் சு.இராசரத்தினம் அரங்கில் ஈழத்து சமய மரபில் கல்வி எனும் தலைப்பில் ஆறாவது அமர்வும் நடைபெறவுள்ளன.

2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.45 மணிவரை நடைபெறவுள்ள அமர்வில் செல்லப்பா சுவாமிகள் அரங்கில் ஈழத்து திருக் கோயில்களும் மரபுகளும் எனும் தலைப்பில் 7 ஆவது அமர்வும்தவத்திருயோகசுவாமி அரங்கில் ஈழத்து சித்தர் பாரம்பரியம் எனும் தலைப்பில் எட்டாவது அமர்வும் சுவாமிஜி ஜீவானந்த மகராஜ் இளைஞர் அரங்கு எனும் தலைப்பில் 9 ஆவது அமர்வும் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கில் மங்கையர் அரங்கு எனும் தலைப்பில் 10 ஆவது அமர்வும் நடைபெறவுள்ளன.

அன்றையதினம் மாலை 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கில் நடைபெறவுள்ள இறுதிநாள் நிகழ்வு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரைகளை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபாணந்தஜி மகாராஜ், இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ. ச.மகேஸ்வரக்குருக்கள்ஆகியோர்வழங்கவுள்ளனர்.

வரவேற்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் வழங்குகின்றார்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தே.ம.சுவாமிநாதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்திய உதவி உயர்ஸ்தானிகர் ஆ.நடராஜன், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.இதன்போது அச்சுவேலி சிவஞானபானு, சிவஸ்ரீ குமா ரசுவாமி குருக்கள் ஆக்கிய மகோற்சவ விளக்கம் நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

இதன்நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் பதில் வேந்தரும் தகைமைசார் பேராசிரியருமான இராஜரட்ணம் குமாரவடிவேல் வழங்கவுள்ளார்.

வை.சோமசேகரன் தொகுத்த ஈழத்து ஆலயங்கள் பாகம் -1 யாழ்.மாவட்டத் திருத்தலங்கள் நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் வழங்குகிறார். சிறப்புரையினை இந் தியா தருமபுர ஆதீன முதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் வழங்கவுள்ளனர். (இ-5)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகம் பதவியேற்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகத்தின் பதவியேற்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.59 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபை மண்டபத்தில் சுன்னாகம் லயன்ஸ்கழகத்தலைவர்லயன் பொ.பாலகுமார் தலைமையில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக லயன்ஸ் கழக முன்னாள் ஆளுநர் லயன் எஸ்.ராகவனும் லயன் சீமாட்டி ரஞ்சினியும் சிறப்பு விருந்தினர்களாக நர்கொழும்பு கோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டல் நிர்வாக இயக்குநர் லயன் தேவா பீற்றரும் லயன் சீமாட்டி ஜெசிந்தாவும் கலந்துகொள்வர்.

2015/2016 ஆம் ஆண்டுக்குரிய புரிய தலைவராக சுன்னாகம் பீப்பிள் லீஸிங் கம்பனி உத்தியோகத்தர் லயன் ந.தயாரூபனும், செயலாளராக வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரனும், பொருளாளராக சமூகசேவகா லயன் செ.மகாதேவாவும், அங்கத்துவப் பணிப்பாளராக வலி. தெற்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் த.தேவராஜனும், நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளராக தொழிலதிபர் லயன் ந.சண்முகவேலும் உபதலைவர்களாக ஹெல்திலங்கா நிறுவன மாகாண நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் லயன் ஆர்.சிவநாயகமும், யூனியன் வங்கி உத்தியோகத்தர்லயன்யோ.புருக்ஷோத்மனும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.சித்தார்த்தன், சட்டத்தரணி எஸ்.பி.சிவஞானம், சட்டத்தரணி எஸ்.சுந்தரலிங்கம், வைத்திய கலாநிதி எஸ். பேரின்பநாயகம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் லயன் ம.செலவஸ்தான், இலங்கை வங்கி முகாமையாளர் லயன் பொ.பாலகுமார், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் லயன் அ.குமாரவேல், ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்லயன்மா.இராமலிங்கம், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர் லயன் அ.சிவகுந்தன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர்லயன்சி.கஜன் ஆகியோர் பதவியேற்கவுள்ளனர். (இ)


பொதுத்தேர்தல் 2015 சுயேட்சைக் குழு-5

ஊழல், போதைவஸ்து ஒழிப்பு!

சமுதாய சட்ட ஒழுங்கு!

நாளந்த மக்கள் நலன்கள்!





X 3

3 பட்டம்: நேர்மை, தகமை, சேவை

வீ.ஆ.ஜெயசங்கரி B.A.

(Public Administration & Governance)

(அரச நிர்வாகமும் ஆட்சியும்)

பல்திறன்களை பலமுனைகளில் தெரிவு செய்வீர்

(இ-33)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 மாவட்டங்களில் வெற்றி பெறும்

## டிலான் பெரேரா நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 மாவட்டங்களில் வெற்றி பெறும் என முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 120இற்கும் மேற்பட்ட ஆசனங்களை கைப்பற்றி அரசாங்கத்தை அமைக்கும். பிரதமராக மகிந்த ராஜபக்ஷ கட்டாயம் நியமிக்கப்படுவார்.

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் ஒரு ஐ.ஆர்.சிகாரன் இருக்கின்றாரா? இல்லையா? என்ற விடயத்தை நீதிமன்றம் தீர்மானிக்கும் எனவும் டிலான் பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-7)

### தேர்தல் வன்முறை

# 10 முறைப்பாடுகள் யாழில் பதிவு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் இது வரை தேர்தல் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 10 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டுதல் தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பொது இடங்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தல் தொடர்பான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச் சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-9)


**வேலையாட்கள் தேவை**

யாழ். கச்சேரிக்கு அருகாமையில் உள்ள ஓர் உணவகத்திற்கு சமையல் வேலை, உதவியாளர், பரிமாறுபவர், றொட்டி வேலை, பில் கிளார்க் போன்றவற்றுக்கு வேலையாட்கள் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும். பகுதிநேர வேலைக்கும் ஆட்கள் தேவை.

தொலைபேசி:- 077 119 0011, 077 989 1502

(கச்சேரிக்கு அருகாமையில்)

**மலேசியாவில்** சிறந்த கம்பனியில்

**40 பேருக்கு உடனடி வேலைவாய்ப்பு**

**தொழிற்சாலை ஊழியர்கள்** | **Factory Workers**

ஊதியம் 900 RM | மேலதிக கொடுப்பனவு உண்டு

*1RM = 42 LKR

**நிபந்தனைகள்**

- ஒப்பந்த காலம் 3 வருடம் ■ தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி நிறுவனத்தினால் வழங்கப்படும்.
- ஒப்பந்த கால முடிவின் போது திரும்பி வருவதற்கான விமான டிக்கட் வழங்கப்படும் ■ உணவுக்கான கொடுப்பனவு வழங்கப்படாது ■வயதெல்லை 20-35. ■ சேவை நேரம் கிழமைக்கு 48 மணித்தியாலம்
- ஏனைய நிபந்தனைகள் அந்நாட்டு சட்டத்திட்டத்திற்கமைய இடம்பெறும்.

*CV Collection Only

20 வருட கால அனுபவத்தை கொண்ட

**SIO INTERNATIONAL**

Recruitment Agency

No. 77, First Floor, People Park Shopping Complex, Gas Work Street, Colombo-11, **Sri Lanka.**

**T.P :** +94 11 5330032, **Fax :** +94 11 2332977, **Hotline :** +94 72 2364655, 72 7977977

யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள : +94 72 2269876, 72 2269874

www.siojobs.com

(1168)


# ராசி பலன்

29.07.2015

(ஆடி 13, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 8.19 மணிவரை
மூலம் பிற்பகல் 12.27 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
சுபநேரம் 4.33- 6.03மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | கிரகநிலை | | சூரி புதன் |
| | | | குரு சுக் |
| சந் | | சனி | ராகு |

**மேடம்**: தடைகள் அகன்று தனவரவுகள் பெருகும் நாள், தொழில் ரீதியாக இருந்த மறைமுக போட்டிகளைச் சமாளிப்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**இடபம்**: மனக்குழப்பம் அகல பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், பிறருக்காக பொறுப்புகள் சொல்வதை தவிர்ப்பது நல்லது, பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**மிதுனம்**: உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**கடகம்**: தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும்.

**சிம்மம்**: பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவமொன்று இல்லத்தில் நடைபெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி**: பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்**: எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்**: உறவினர் வருகையுண்டு, தனவரவு திருப்திகரமாக அமையும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்களாலும் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு**: மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், இரவு, பகல் பாராது பாடுபடுவீர்கள்.

**மகரம்**: ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயன சுகக் குறைவுண்டு, விரயங்கள் கூடும்.

**கும்பம்**: தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் கூடும், வருமானம் திருப்திதரும், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்**: உறவினர்களும நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டை அழகுபடுத்துவதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி முதல்

# புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்யப்படாது

## வர்த்தகர்கள் இணைந்து தீர்மானம்

(மல்லாவி)

**ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் நகரம் உட்பட ஒலுமடு, கரிப்பட்ட முறிப்பு, கிழவன்குளம்,பனிக்கன்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள உணவுச்சாலைகள்,பல்பொருள் வாணிப நிலையங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களிலும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்யப்படமாட்டாது எனும் ஏகோபித்த முடிபு ஒன்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த வாரம் மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் அலுவலகத்தில் வர்த்தகர்களுக்கான சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போதே மேற்படி தீர்மானத்தை வர்த்தகர் அனைவரும் இணைந்து எடுத்துள்ளனர்.

தேசிய போதை ஒழிப்பு மாதமானது கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை வரை ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாட்டிலுள்ள அனைத்து வர்த்தகர்களுக்கும் முன்மாதிரியானதொரு செயற்பாடாக இது அமைந்துள்ளது.

ஏற்கனவே மாங்குளம் வர்த்தகர்கள் இணைந்து வாரத்தின் வெள்ளிக்கிழமைகளில் வெற்றிலை,பாக்கு(சீவல் வெற்றிலை பாக்கு) விற்பனை செய்வதில்லையென தீர்மாணம் எடுத்ததற்கு அமைவாக அதனை இன்றுவரை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக மாங்குளம் வர்த்தகர்களிடம் வினவியபோது,

நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளின் போது பாதிக்கப்பட்டு மீண்டெழுந்து வருகின்ற இளைஞர் சமுதாயம் போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்ற நிலை காணப்படுகின்றது.

எமக்கு வருமானம் கிடைக்கப் பெறுகின்றமைக்காக எதிர்கால சந்ததியினரின் வாழ்வை அழிக்கவிரும்பவில்லை. எனவே தான் அனைத்து வர்த்தகர்களும் இணைந்து இந்த முடிபை எடுத்துள்ளோம்.

எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை துறைசார்ந்த சுகாதார பகுதியினர், மாங்குளம் பொலிஸார் , மாங்குளம் பிரதேச வர்த்தகர்கள் ஆகியோர் இணைந்து இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரகடனம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக வர்த்தகர்கள் மேலும் தெரிவித்தனர். (2-15)






அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பாக தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சேவை செய்த முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக மூன்று தடவை பதவி வகித்த சிவசிதம்பரத்தின் சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவரின் ஞாபகார்த்தமாக வைரவ புளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் மக்கள் சேவை மாமணி சேனாதிராஜா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் முன்னாள் மாவட்ட சபை தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சிற்றம்பலம் சிலையை திறந்து வைத்தார். இதேவேளை கலா பூஷணம் தேவராசா மலர்மாலை அணிவித்ததுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற வேட்பாளர்கள், மக்கள் என பலரும் மாலை மற்றும் மலர் தூவி திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தினர். (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

# மாகாண மட்ட கணித வினாவிடை போட்டி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இடையில் மாகாண மட்ட கணித வினாவிடைப்போட்டி நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தின் கீழ் இயங்குகின்ற பாடசாலை மாணவர்களிடையே மாகாண மட்ட கணித வினா விடை போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும்.

இதில் கனிஷ்ட பிரிவிலுள்ள மாணவர்களுக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு யா/ஹாட்லி கல்லூரி பருத்தித்துறையில் நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு யா/ஹாட்லி கல்லூரி பருத்தித்துறையில் நடைபெறும். இப்போட்டிகளில் வலய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்குழுக்கள் பங்கேற்கவுள்ளனர்.

வலயக்கல்விப்பணிப்பாளர்கள், போட்டியில் பங்கேற்கவுள்ள மாணவர்கள், கல்வி பயிலும் பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாக மாணவர்கள் போட்டியில் பங்குபற்றுவதற்குரிய ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-15)

ஏனைய மாகாணங்களின்

# அரசியல் கைதிகளின் குடும்பங்கள் மன்னார் அலுவலகத்துடன் தொடர்பு கொள்க

## வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(மன்னார்)

ஏனைய மாகாணங்களில் உள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்கள், சிறையில் உள்ளவர்களின் சகல விபரங்களோடும் இன்று காலை 10 மணிக்கு மன்னாரில் உள்ள உப அமைச்சர் அலுவலகத்துக்கு தவறாது சமுகம் தந்து தமது பதிவுகளை மேற்கொண்டு உதவித் திட்டத்தினை பெற்றுக்கொள்ளுமாறும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேட வாழ்வாதார திட்டத்தின் கீழ் வடக்கின் ஐந்து மாவட்டத்திலும் உள்ள சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் சுமார் 324 குடும்பங்களுக்கு நிரந்தர வருமானத்தை உருவாக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது.

தற்போது ஏனைய மாகாணங்களில் இருந்தும் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் என்னுடன் தொடர்புகொண்டு தமது குடும்ப நிலவரம் தொடர்பாக எடுத்துரைத்ததற்கு அமைவாக, விசேட திட்டமாக ஏனைய மாகாணங்களில் உள்ள சிறையில் வாடும் அர சியல் கைதிகளின் குடும்பங்களுக்கும் இந்த உதவித்திட்டத்தை வழங்க முடிவெடுத்துள் ளேன். அத்தோடு இத்திட்டத்தில் முஸ்லிம் சமூகத்தை சார்ந்த அரசியல் கைதிகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த தினத்தில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இந்த ஆண்டுக்கான திட்டத்தில் சேர்க்கப்பட மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுதிருத்தங்களுடன் சேதமடைந்த வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றோம்

## குறைகேள் சந்திப்பில் செல்வராணி குடியிருப்பு மக்கள் தெரிவிப்பு

மாங்குளம் செல்வராணி குடியிருப்பு மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

இக்குறைகேள் சந்திப்பில் பொதுமக்கள் தமது குறைகளை முன்வைக்கையில்,

குறித்த குடியிருப்பில் மொத்தம் 24 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றோம்.

இக்குடும்பங்கள் வன்னி யுத்தத்தை அடுத்து தமது பிள்ளைகளில் ஒருவரையோ அல்லது இருவரையோ அல்லது மூவரையோ இழந்துள்ளனர்.

இந்நிலையில் புதிய வீடுகள் அரசாங்கத்தினால் கட்டித்தரப்படவில்லை. சேதமடைந்த வீடுகளுக்கு சிறு திருத்தங்கள் மேற்கொள்வதற்கு சிறுதொகை பணம் கிடைக்கப்பெற்றது.

தற்போது அத்திருத்தங்களைச் செய்தும் வீடுகளின் சுவர்கள் வெடிப்புக்களுடன் காணப்படுகின்றன.

மழைநீர் வழிந்தோடுவதற்கு உரிய வாய்க்கால் இன்மையால் மழைகாலங்களில் வீடுகளினுள் வெள்ளநீர் வருகின்றது.

மாங்குளம் பகுதியில் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்திப்பணிகளுக்கும் வெளிப்பிரதேச கூலியாட்களே பெரும்பாலும் உள்வாங்கப்படுவதாகவும் அவர்களுக்கு பதிலாக தங்கள் பிரதே சத்திலேயே உள்ள கூலியாட்களை உள் வாங்குவதன் மூலம் தம் நாளாந்த வாழ்வியலில் எதிர்நோக்கும் சவால்களை இயன்றளவில் குறைத்துக்கொள்ள முடியும் என்றும் அம்மக்கள் கோரியிருந்தனர்.

மேற்படி குறைகள் அனைத்தையும் நேரில் பார்வையிட்டு உறுதிப்படுத்தியதோடு மட்டுமல்லாது போரில் பாதிக்கப்பட்ட அக்குடும்பங்களின் விபரங்கள் அனைத்தையும் நேரில் பெற்றுக்கொண்டதோடு இக்குறைகள் அனைத்தும் வடமாகாண முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் எனவும் தெரிவித்தார். (2)

Valampuri 0002.pdf 1 7/28/2015 5:50:12 PM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்

X 7

அர்ப்பணிப்பு! அனுபவம்!! நேர்மை!!!

7





அகிம்சாவாதி
அமரர்.வி.தர்மலிங்கம்
(முன்னாள் மானிப்பாய் / உடுவில் தொகுதி பா.உ)

(சி-262)

திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)
- யாழ் மக்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)



பாராளுமன்ற பொதுத் தேர்தல்–2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



4

காசிப்பிள்ளை குலசேகரம்
B.A. Dip-in Ed, MEd
தமிழர் விடுதலைக் கூட்டணி

(020)

X 4

இல்லாமை இல்லாத சமூகத்தை உருவாக்குவோம்



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்.மாவட்டம்



5

(சி-268)

ந.மதிஅழகராசா (மதி)
வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்

X 5

தமிழர் விடுதலைக் கூட்டணி

வெறும் பேச்சுக்களை நம்புபவன் தமிழன் அல்ல...



பாராளுமன்றத் தேர்தல் - 2015
[யாழ்ப்பாண மாவட்டம்]
சி. கோகிலவாணி (சுகன்யா)



(C-270)

மக்களின் மண்ணை மீட்க...
மக்களின் சுதந்திரத்தை உறுதிசெய்ய
மக்களின் வாழ்வுரிமையை வென்றெடுக்க - எமது
மக்களோடு என்றும் இணைந்திருப்போம்!
வெல்வோம்... வாழ்வோம்...

X 9

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

தமிழர் தேசியம், தாயகம், சுயாட்சிக் கொள்கையின் விசுவாசியாக, ஒடுக்கப்படும், ஏமாற்றப்படும் மக்களின் உரிமைக்குரலாக, வளர்முக சமூகங்களின் புதிய அரசியல் தலைமையின் ஆரம்பமாகச் செயற்படும் அண்ணன் இராசேந்திரனை வெற்றிபெற வைப்போம்.



ஆறுமுகம் நடேசு
இராசேந்திரன்
HNDA,APFA,ACA,FMAAT,FIPFM(UK)
சிரேஷ்ட கணக்காளர்,
முன்னாள் தலைவர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை.

சுயேட்சைக் குழு
இலக்கம் - 2

X 1

(C-266)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 22 செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில் A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/969

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 23 செவ் 4 இல்
உயரம்: 130cm
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் விரும்பத்தக்கது
தொ.இ: B/971

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம் அச்சுவினி
கி.பா: 18 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி/ லண்டன் NOT PR
தொ.இ: B/972

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 45 செவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSC, MSC/ லண்டன்
தொ.இ: B/973

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 56 சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: G/1735

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 63 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1740

பிறப்பு: 1979 RC
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 20
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் விரும்பத்தக்கது
தொ.இ: G/1741

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 51 செவ் 7 இல்
உயரம்: 153cm
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/1742

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை


# வாழ்க்கை செலவை குறைப்பதற்கு முன்னுரிமை கொடுக்க போகிறேன்

## மகிந்த கூறுகிறார்

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்த பின்னர், வாழ்க்கை செலவை குறைக்கும் வேலைத்திட்டங்களுக்கு முன்னு ரிமை கொடுக்கப் போவதாக முன்னாள் ஜனா திபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாள ருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

கலகெதர பிரதேசத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி வர்த்தகர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் விவசாயத்தை காட்டிக்கொடுத்து வருகிறது.

கிழங்கு, பருப்பு போன்றவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டமை குறித்து எதனையும் கூறுவதில்லை. பொருளாதாரம் தரை மட்டமாகியுள்ளது.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், தரை மட்டமான பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்போம் எனவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

10 வருடங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ஷ, அந்த 10 வருடங்களில் 5 வருடங்கள் கூட மக்களின் வாழ்க்கை செலவு பற்றி கவலைப்படவில்லை எனவும் இப்படியான ஒருவர், வாழ்க்கைச் செலவை குறைக்க முன்னுரிமை கொடுக்கப் போவதாக கூறுவது கேலிக்குரியது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திணைக்களம்
## அறிவித்தல்

## மக்கள் தீர்ப்பொன்றிற்கான அல்லது தேர்தலொன்றிற்கான காலக்கெடுவின்போது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறி அல்லது வழிகாட்டு நெறிகள் (Guidelines)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் 23 (5) அ ஆம் உறுப்புரைக்கமைய தேர்தல்கள் ஆணைக்குழு / தேர்தல்கள் ஆணையாளரி னால் மக்கள் தீர்ப்பொன்று அல்லது தேர்தலொன்று நீதியாகவும் சுதந்தி ரமாகவும் நடாத்தப் படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள இலத் திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாட்டாளர்கள் பின்பற்றியொழுக வேண்டிய வழிகாட்டு நெறிகள் கீழ்வருமாறானவையாகும்.

1.பிரச்சாரங்களுக்காக செய்திப் பத்திரிகைகளில் இடங்களைக் குறித்தொதுக்குகையிலோ அல்லது வானலைக் காலத்தை வழங்குகையிலோ போட்டியிடுகின்ற எந்தவோர் அரசியற் கட்சிக்கும், சுயேச்சைக் குழுவுக்கும், வேட்பாளரொருவருக்கும் வேறுபாடு காட்டப்படக் கூடாதென்பதோடு, விசேட ஊக்குவிப்பொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்படாத விதத்தில் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களும் சமநிலைத் தன்மையையும் கட்சி சார்பற்ற போக்கையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

2.செய்திகளையும் மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பான இதர நிகழ்ச்சிகளையும் ஒலி /ஒளிபரப்புச் செய்கின்ற போது அனைத்து ஊடக நிறுவனங்களும் சரியான, சமநிலையான மற்றும் பக்கச்சார்பற்ற தகவல்களை மாத்திரம் ஒலி / ஒளிபரப்புச் செய்தல் வேண்டும். இச்சமநிலைத் தன்மை மற்றும் பக்கச் சார்பற்ற தன்மை என்பன தேர்தல்கள் முறைப்பாடுகள் தொடர்பான நிரந்தர முகவர் குழு மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகள் முகவர் குழுவின் கண்காணிப்புக்கு அடிக்கடி இலக்காகும்.

3.செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர் கருத்தொன்று குழப்ப நிலையைக் கொண்டதாகவோ சமநிலைத் தன்மையற்றவொன்றாகவோ காணப்படுகின்றபோது, வேறுபாட்டுத் தன்மை நிலவ முடியுமாதலால் ஆசிரியர் கருத்தொன்றை இலத்திரனியல் ஊடகம் ஊடாக ஒலி/ ஒளிபரப்பக் கூடாது. ஆயினும் ஏதேனுமொரு காரணத்தினால் அவ்வாறான கருத்தினை ஒலி / ஒளிபரப்பப்படின் அதற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினர் அனுமதி கோரினால் அதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

4.தொலைக்காட்சி அலைவரிசையொன்றின் மூலம் அல்லது வானலை அலைவரிசை யொன்றின் மூலம் பத்திரிகை தலைப்பு செய்திகள் தொடர்பாக அல்லது கார்டூன் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனங்கள் மற்றும் கலந்துரையாடலின் போது அந்நிகழ்ச்சியை தொகுத்தளிக்கின்ற நபரின் தனிப்பட்ட கருத்தை தெரிவிக்க விளையும் போது ஒரு தரப்பினர் ஊக்குவிக்கப்படுவதோடு, மற்றொரு தரப்பினர் பாதிக்கப்படுவதால் அவ்வாறான தனிப்பட்ட கருத்துக்களை ஒலி / ஒளிபரப்புச் செய்யாதிருத்தல் வேண்டும்.

5.தேர்தல் காலக்கெடுவினுள் முறையான அல்லது சட்டரீதியற்ற அறிவித்தல்களை வெளியிடாதிருத்தல் மற்றும் பக்கச் சார்பான நிகழ்ச்சிகளை ஒலி / ஒளிபரப்புச் செய்யா மலிருப்பது மற்றும் அனுபந்தம் பிரசுரிக்காமல் இருத்தல் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் செய்திப் பிரிவுகள் மற்றும் நடப்புச் செய்திகளுக்குப் பொறு ப்பான பிரிவுகளின் பொறுப்பாகும்.

6.ஏதேனுமொரு சம்பவமோ அல்லது நிகழ்ச்சியோ பற்றிய விடயங்களை ஒலி / ஒளிபரப்புச் செய்கையில் ஏதேனுமொரு வேட்பாளரின் கருத்துக்களை சமர்ப்பிக்கின்றபோது அவ்விடயங்கள் தொடர்பான அக்கறையொன்றையோ அல்லது ஆர்வமொன்றையோ காட்டு கின்ற அல்லது அவ்விடயத்தினால் பாதிப்பொன்று ஏற்படக்கூடிய போட்டியிடுகின்ற ஏனைய கட்சிகளுக்கும் விடயங்களைச் சமர்ப்பிக்க அச்செய்தி ஒலி / ஒளிப்பரப்பப்படுகின்ற போதோ அல்லது வேறு சந்தர்ப்பமொன்றிலோ அதற்கான வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.

7.தேர்தல் காலக்கெடுவினுள் தேர்தலுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற விவரண நிகழ்ச்சியோ அல்லது விசேட நிகழ்ச்சியோ ஒலி / ஒளிப்பரப்பப்படுகின்றபோது பிரதியாக்குநர், அறிவிப்பாளர் மற்றும் தயாரிப்பாளரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். அவ்வாறிருப்பி னும், ஊடக தர்மத்திற்கிணங்க பிரதியாக்குநர், அறிவிப்பாளர் மற்றும் தயாரிப்பாளர் ஆகி யோரின் பெயர்களை வெளியிடாதிருக்கும் உரிமையை வைத்துக் கொள்ள ஏதேனும் நிறுவன மொன்று எதிர்பார்க்குமாயின் அச்சந்தர்ப்பத்தில் ஒலி / ஒளிப்பரப்புக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அந்நிகழ்ச்சியின் பொறுப்புக் கூறலை பொறுப்பேற்றல் வேண்டும்.

8.தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கெதிராக செய்யப்படுகின்ற நியாயமாக நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்களை செய்தி அறிக்கைகளில் அல்லது நிகழ்ச்சிகளில் ஒலி/ஒளிப்பரப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். வேறு வேட்பாளரொருவர் அல்லது ஆதரவாளரொருவரினால் ஏதேனும் ஊடகமொன்றினூடக தன்னைப் பற்றி செய்யப்பட்ட கூற்றொன்று பொய்யானதென ஏதேனும் போட்டியிடுகின்ற கட்சியொன்று அல்லது வேட்பாளரொருவர் விடயங்களை முன்வைக்குமிடத்து குறித்த கூற்றுக்கு வழங்கிய பிரச்சாரத்திற்கு சமமான சந்தர்ப்பமொன்றில் அது தொடர்பான எதிர்கருத்துக்களை தெரிவிப்பதற்கும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

9.கடமை ரீதியான வைபவங்கள் மற்றும் குற்றவியல் தொடர்பான சம்பவங்கள் வாக் கெடுப்போடு தொடர்பற்ற செய்திகளைப் பரப்புகின்ற போது அதன் மூலம் கட்சியொன்றுக்கு / வேட்பாளரொருவருக்கு ஊக்குவிப்பொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்பட்டுள்ளதாக தெரியவரின் குறித்த மற்றத்தரப்பினரிடமிருந்தும் கருத்துக்களை உசாவி ஒலி / ஒளிப் பரப்புவதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் நுணுக்கமாகவும் சாதுரியமாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

10.ஜனாதிபதியவர்களோ அல்லது பிரதம மந்திரி அவர்களோ அல்லது அரசாங்கத்தின் அமைச்சர்களோ தொடர்புபடுகின்ற அரசியல் கருத்துக்களை / கொள்கைகளை வெளிப் படுத்துகின்ற தொலைக்காட்சி / வானொலி நிகழ்ச்சிகளை அவர் சார்ந்த அரசியல் கட்சியின் நிகழ்ச்சிகளாகக் கருதுதல் வேண்டும். ஆதலால், அதற்கெதிரான கருத்தைக் கொண்ட அரசியற் கட்சிகளின் தலைவர்களுக்கும் அதற்குச் சமமான நிகழ்ச்சிகளை வழங்குதல் வேண்டும். அச்சு ஊடகங்களும் அதே விதத்தில் அனைத்து அரசியற் கட்சிகள் / வேட்பா ளர்களுக்கு விசேட நேர்காணல்களை வழங்கும் போதும், கட்சிக் கூட்டங்கள் பற்றிய அறிக் கைகளை வெளியிடுகின்ற போதும் சம அந்தஸ்தையும் சம உரிமையையும் வழங்குதல் வேண்டும்.

11.எவரேனும் வேட்பாளரொருவருக்கு அல்லது வேட்பாளர்கள் பலருக்கு விசேட கவனம் செலுத்தி அவரை ஊக்குவிக்கின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவர் பாதிக்கப்படுகின்ற விதத்தில் வானலைக் காலத்தை அல்லது செய்திப் பத்திரிகைகளில் இடங்களைக் குறித்தொதுக்குதல் கூடாது.

12.தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிக்கக் கூடிய தான அல்லது வேறு வேட்பாளரொருவரை பாதிப்புக்குட்படுத்தக் கூடியதான விதத்தில் அரச அலுவலர்களால் நடாத்தப்படும் உரைகள், நேர்காணல்கள் போன்ற நிகழ்ச்சிகளை பிரச்சா ரம் செய்வதையும் மற்றும் ஒலி / ஒளிபரப்புச் செய்வதையும் அனைத்து ஊடகங்களும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

13.அரசியல் விடயங்கள் தொடர்பாக செய்யப்படுகின்ற அல்லது தேர்தலோடு தொடர்பு டைய குழுக் கலந்துரையாடல்களில் பங்கேற்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் உண்மையாக போட்டியிடுகின்ற அனைத்து தரப்புக்களுக்கும் நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்பதோடு, அடுத்தவர்களுக்கு பாதிப்பொன்றேற்படாத விதத்தில் நேர்காணலை நெறிப்படுத்தல் வேண்டும். ஏதேனும் நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்ற முகவரொருவருக்கு உரிய மொழிப் புலமை காணப் படாதவிடத்து அவருக்குப் பாதிப்பு ஏற்படக் கூடியவாறு நிகழ்ச்சியை நெறிப்படுத்தக் கூடாது. அச்சு ஊடகங்களில் நேர்காணல்களை வெளியிடும்போது மொழிப் புலமையின்மை கலந்துரையாடலில் கலந்து கொள்கின்ற அரசியல்வாதிக்கு பாதிப்பை ஏற்படுத்தத்தக்கவாறு செயற்படுதல் கூடாது. தெளிவற்ற, புரிந்தகொள்ள முடியாத வினாக்களினூடாகப் பெறப்பட்ட தகவல்களை வெளியிடவும்கூடாது. உறுதி செய்து கொள்ள முடியாத அல்லது இனப் பிரிவுகளிடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது முறையற்ற விடயங் களை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு கலந்துகொள்வோர்களுக்கு கலந் துரையாடலின் ஆரம்பத்திலேயே பிரசித்தமாக அறிவித்தல் வேண்டுமென்பதோடு, கலந் துரையாடலின் இடையில் அவ்வாறான முறையற்ற செயற்பாடொன்று இடம்பெறுமாயின், நிகழ்ச்சியை இடைநிறுத்தல் வேண்டும்.

14.தொலைபேசி மூலம் வினாக்களும் தகவல்களும் பெறப்பட்டு நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளின்போது, அனைத்துத் தொடர்பாளர்களுக்கும் அவர்களின் வினாக்களிலோ அல்லது முன்மொழிவுகளிலோ உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எவையாயினும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். அந்நிகழ்ச்சிகளின் சமநிலைத் தன்மைக்கு அந் நிகழ்ச்சிகளை நடாத்தும் அனைத்து அலுவலர்களும் வகை கூறுதல் வேண்டும்.

15.எந்தவோர் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக நிறுவனத்தின் தவிசாளரொருவர், பணிப்பாளர் சபை அங்கத்தினரொருவர் அல்லது பொறுப்புமிக்க ஊடகவியலாளரொருவர் அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபாடு கொண்டவராகவிருப்பின், அத்தகைய ஈடுபாடு சமநிலையான செய்தி மற்றும் பிரச்சாரங்களின் ஒலி / ஒளிபரப்பைப் பாதிக்கச் செய்ய வல்ல சிக்கல்களைத் தோற்றுவிக்க ஏதுவாக அமையலாம். ஆதலால் அவ்வாறான சந்தர் ப்பங்களில் கீழ்வரும் விடயங்களை நிறுவனத்தின் முகாமைத்துவத்தினர் அறிந்து கொள் வதற்காக எழுத்து மூலம் நிகழ்ச்சிக்கு முன்னர் உரிய அலுவலர்கள் / ஊழியர்களால் அறிவிக்கப்படல் வேண்டும்.

**(அ) அத்தகையவர்களின் தலையீட்டின் இயல்பு**

**(ஆ) அத்தகையவர்களின் தொழிலின் இயல்பும் மட்டமும்**

**(இ) நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றபோது அத்தகையவர்களின் அழுத்தம் மற்றும் தலையீட்டின் பரப்பெல்லை.**

16.அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை (தலைவர், தவிசாளர், செயலாளர், தேசிய அமைப்பாளர், பொருளாளர், பிரதித் தலைவர், உப தலை வர், சிரேஷ்ட பிரதித் தலைவர் அல்லது அதற்குச் சமமான அதிகாரம் கொண்ட) வகிக்கின்ற நபரொருவர் ஊடக நிறுவனமொன்றில் பணிப்பாளர் சபைத் தலைவர், பணிப்பாளர் சபை அங்கத்தவர், பிரதம நிறைவேற்று / பிரதம ஆசிரியர் போன்ற முக்கிய பதவியொன்றை வகிக்கும் போது அந்நபர் ஏதேனும் தேர்தலொன்றில் வேட்பாளராகப் போட்டியிடுவாராயின் அல்லது அவர் முக்கிய பதவியொன்றை வகிக்கும் கட்சி தேர்தலில் நேரடியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாகப் போட்டியிடுமாயின் அத்தேர்தல் காலக்கெடுவினுள் அவர் ஊடக நிறுவனத்திற்குரிய பதவியில் மும்முரமாக ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். மேலும் ஏதேனும் தேர்தலொன்றில் போட்டியிடும் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை வகிக்கும் நபரொருவர் அல்லது தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நபரொருவர் அத்தேர்தல் காலக்கெடுவினுள் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடக ங்களில் அரசியல் சார்பான நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டு மென்பதோடு, அச்சு ஊடகமொன்றில் நிரந்தர பணியில் ஈடுபட்டிருப்பாராயின் அவ்வூட கத்தினூடாக தனது அரசியல் சார்பான கடிதங்கள் / ஆவணங்கள் என்பனவற்றைப் பிரசுரிப்பதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

17.ஏதேனுமோர் ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கலந்துரையாடலில் அல்லது செவ்வியில் பங்குபற்ற கட்சியொன்று / நபரொருவர் மறுக்கின்ற சந்தர்ப்பமொன்றில் மற்றும் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களை முன்வைக்காத சந்தர்ப்பத்தில் ஊடக நிறுவ னத்தினால் அத்தகைய கட்சிக்கு /நபருக்கு வசதியீனமொன்று ஏற்படாத விதத்தில் செயற் படுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் வெற்றுக் கதிரையொன்றைக் காட்டுவது போன்ற நாடகப் பாணியிலான உத்திகளுக்குப் பதிலாக நேரடியாக மற்றும் எளிய அறிவித்த லொன்றின் மூலம் கலந்துகொள்ளாமையை வெளிப்படுத்துவது பொருத்தமாகும்.

18.கருத்துக் கணிப்பொன்றின் முடிவுகளை /லத்திரனியல் ஊடகமொன்றின் ஊடாக ஒளிபரப்புகையில் அல்லது அச்சக ஊடகமொன்றில் பிரசுரிக்கின்றவிடத்து அக்கருத்துக் கணிப்பை நடாத்திய அமைப்பை அறிமுகப்படுத்தல், அப்பணி பொறுப்புவிக்கப்பட்ட மற்றும் அதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கிய நிறுவனம் அல்லது நபர், பயன்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை, தவறுகளின் எல்லை மற்றும் களத்தில் பணியாற்றிய நாட்கள் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கருத்துக் கணிப்பு நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய மக்கள் கருத்து மாத்திரம் இதன்மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளதென ஒலி / ஒளிபரப்பாளர் குறிப்பிடுதல் வேண்டும்.

19.போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரினால் வேறு கட்சியொன்றின் / குழுவொன்றின் அல்லது எதிர்க்கட்சியொன்றின் / குழுவொன்றின் வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிக்கக் கூடியதாக வெளியிடப்படுகின்ற கருத்துக்களை பிரச்சாரம் செய்யக்கூடாது, பிரசுரித்தல்கூடாது.

20.தேர்தல்கள் ஆணைக்குழு / தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்படும் எழுத்து மூலமான அனுமதியின்றி வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தினுள் புகைப்படம் பிடித்தல், காணொளிக் காட்சிகளை எடுத்தல் (வீடியோ) என்பன தடைசெய்யப்பட்டுள்ளதால் அவ்வாறு செய்வதிலிருந்து சகல ஊடகவியலாளர்களும் தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென்பதோடு, சட்டவிரோதமாக எடுக்கப்படும் புகைப்படங்கள் / காணொளிக் காட்சிகளை (வீடியோ) பத்திரிகைகளில் பிரசுரித்தல் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒலி / ஒளிப்பரப்புச் செய்தல் என்பவற்றை தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அனுமதி பெற்றுக் கொண்டதன் பின்னர், பெறப்படுகின்ற காட்சிகளாயினும், ஒலி / ஒளிப்பரப்புச் செய்யப்பட வேண்டியது தேர்தல் நிறைவடைந்ததன் பின்னராகும்.

21.முன்னைய சந்தர்ப்பங்களில் ஒலி / ஒளிபரப்பப்பட்ட கலந்துரையாடல்கள், விவாத ங்கள் மற்றும் அத்தகைய நிகழ்ச்சிகள் முதலியவற்றை தேர்தல் தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலங்களுக்குள் மீள் ஒலி / ஒளிபரப்புச் செய்வதோ வெளியிடுவதோ கூடாது.

(C1682)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல்களுக்குரியதாக கட்சிகளின் / வேட்பாளர்களின் பிரச்சார நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வாக் குறுதிகள் தொடர்பாக வாக்காளர் நடுநிலையிலிருந்து கருத்திலெடுக்க முடிந்தவாறு அமைதி யான சூழ்நிலையொன்றை வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் ஏற்படுத்துவது முக்கிய மாதலால், வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் அமைதியான காலமொன்றாக (பிரச்சார அலுவல்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டிய காலமொன்றாக) சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள (48 மணித்தியாலத்திற்குள்) தேர்தலோடு தொடர்புடைய கலந்துரையாடல், வாத விவா தங்கள், வர்த்தக அறிவித்தல்கள் என்பவற்றைப் பிரச்சாரம் செய்வதிலிருந்தும் வெளியிடு வதிலிருந்தும் ஊடக நிறுவனங்கள் தவிர்ந்திருத்தல் வேண்டும்.

22. இலங்கையர்களால் பின்பற்றப்படுகின்ற சமயங்கள், பயன்படுத்துகின்ற மொழிகள், அவர்களின் இனக் குழுமம், பழக்கவழக்கங்கள் மற்றும் ஏனைய குலகோத்திர வேறுபாடு கள் தொடர்பாக நபர்களிடம் குரோதம் மற்றும் பொறுமையின்மையை ஏற்படுத்துகின்ற அல்லது உக்கிரமடையச் செய்கின்ற விதத்திலான பிரச்சார நடவடிக்கைகளை மேற் கொள்ளல்கூடாது.

23.குரோத அரசியல் மனப்பான்மையை கட்சிக்காரர்கள் மற்றும் சமூகத்திலும் விருத்தியடையச் செய்யக்கூடிய விதத்திலான பிரச்சார நடவடிக்கைகளைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

24.வேட்பாளரொருவர் அல்லது ஆதரவாளரொருவர் வேறு கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் வேட்பாளர் ஒருவர் தொடர்பில் ஏற்கனவே வெளியிட்ட கருத்தொன்று, வெளியிட்ட நபருக்கு பாதிப்பொன்றானவாறு அல்லது அடுத்த நபருக்கு ஊக்குவிப்பொன்றை ஏற்படுத்தக்கூடியவாறு அக்கருத்தை வெளியிட்டவரின் இணக்கப்பாடு அல்லது அங்கீகாரமின்றி மீளப் பிரசுரித்தல் மற்றும் ஒலி / ஒளிப்பரப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்தி ருப்பது பொருத்தமென்பதோடு, அவர் வேறொருவர் அல்லது கட்சியொன்று தொடர்பில் வெளியிட்ட கருத்தை அடிக்கடி பிரச்சாரம் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு குறித்த கரு த்தை வெளியிட்ட நபர் செய்கின்ற கோரிக்கைக்கு இசைவு காட்டல் வேண்டும்.

25.அநாமதேய மற்றும் வெளியீட்டாளரின் பெயர் குறிப்பிடப்படாத போலி நபர் அல்லது அமைப்புக்களின் பெயர்களைப் பயன்படுத்தி வெளியிடப்படுகின்ற அறிவித்தல்களை ஊடக நிறுவனங்கள் ஊடாக பிரச்சாரம் செய்தல் கூடாதென்பதோடு, அதற்கான பொறுப்பு குறித்த ஊடக நிறுவனத்தை சாரும்.

26.தேசிய கீதம், தேசியக் கொடி, சமய சின்னங்கள், சமயக் கொடிகள், சமயக் குரவர் களின் சித்திரங்கள், உருவப்படங்கள் என்பவற்றை கட்சி / குழு அல்லது வேட்பாளர் ஊக்குவி ப்புக்காக அல்லது பாதிப்புக்குட்படுத்துவதற்கு ஏதுவான விதத்தில் பிரசுரித்தல் அல்லது ஒலி / ஒளிபரப்புச் செய்தல்கூடாது. அவ்வாறானவைகள் உள்ளடக்கப்பட்ட அறிவித்தல்களை ஒலி / ஒளிப்பரப்புச் செய்தல்கூடாது.

27.போலியான கருத்துக்கள் / செய்திகளை வெளியிடுதல் தொடர்பான முழுப்பொறுப்பை யும் வெளியிடுகின்ற நபரும், அவ்வூடக நிறுவனங்கள் பொறுப்பேற்றல் வேண்டுமென்ப தோடு, அது தொடர்பாக எழுகின்ற சட்டரீதியான பிரச்சினைகளுக்கான பொறுப்பும் அவர் களுக்குரியதே.

28. ஊடக ஒழுக்க நெறிகள் மற்றும் வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாகவும் அவை மீறப்படாத வகையிலும் செயற்படுவது அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் பொறுப்பாகும்.

29. அரச ஊடக நிறுவனங்களால் கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளர்களின் ஊக்குவிப்புக் காக அரச ஆதனங்கள் மற்றும் நிதியங்களைப் பயன்படுத்துவது பத்தொன்பதாம் அரசி யலமைப்புத் திருத்தத்தின் கீழ் சட்டவிரோதமான செயற்பாடொன்றென்பதோடு, அரசிற்கு செலுத்தப்பட வேண்டிய நிதியை அறவிடாமை அல்லது வேறு விதமொன்றில் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படும் விதத்தில் செயற்படுதல் குற்றமொன்றாகும். அதற்கு அரசியலமைப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக ஒழுக்காற்று நடவடிக்கை யெடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் அவ்வாறான நடவடிக்கைகளை சகல அரச மற்றும் அரச சார்பான ஊடக நிறுவனங்கள் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

30.மேலே காட்டப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகளை அதேவிதத்திலேயே பின்பற்ற அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் உரிமையாளர்களின் பொறுப் பாகுமென்பதோடு, அவ்விதத்தில் அந்நிறுவனங்கள் செயற்படுகின்றதென்பதை அவர்கள் உறுதிசெய்து கொள்ளவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

31.மேலே காட்டப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகளை அதே விதத்தில் தேர்தல் காலக் கெடுவினுள் செயற்படுத்துவதற்கு அனைத்து சமூக இணையத்தளங்களின் உரிமை யாளர்களும், தயாரிப்பாளர்களும் நடவடிக்கையெடுப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

32.இவ்வூடக வழிகாட்டி நெறிகளுக்கு இசைவாக செயற்படுவது ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சமூக இணைத்தளங்களை பேணிச் செல்வோர் / பயன்படுத்து வோரின் கடமையொன்று மாத்திரமன்றி பொறுப்பொன்றெனவும், கவனத்தில் கொள்வது கட்டாயமாகும். ஏனெனில், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்து வதற்கு இவ்வூடக வழிகாட்டி நெறிகளுக்கு இசைவாக செயற்படுவது கட்டாயமென்பதாலாகும்.

33.மேற்படி ஊடக வழிகாட்டு நெறிகளை செயற்படுத்தும் போது எழக்கூடிய பிரச்சினை கள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் நிரந்தர முகவர்கள் மற்றும் தேர்தல் முறைப்பாட்டு விசாரணை ஒருங்கிணைப்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களைக் கொண்ட நிரந்தர முகவர்களின் குழுவிலும் கலந்துரை யாடி அதன் மூலம் எட்டப்படுகின்ற பரிந்துரைகள் மற்றும் ஏற்புடையவிடத்து மனித உரிமை ஆணைக்குழுவின் கருத்துக்கள் /பரிந்துரைகள் ஆராய்ந்து பார்க்கப்பட்டு தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள் ஊடக அமைச்சின் மற்றும் தகவல் திணைக்களத்தின் முகவர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் நிரந்தர முகவர்களை உள்ளடக்கிய ஊடக வழிகாட்டு நெறிகளை செயல்வலுப்பெறச் செய்யும் குழுவின் தீர்மானங்களுக்கமைய செயற் படல் வேண்டும். அதாவது இவ்வூடக வழிகாட்டு நெறிகளை செயற்படுத்துவதற்குரிய வழி காட்டல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை மேலே காட்டப்பட்ட ஊடக வழிகாட்டு நெறி களை செயல்வலுப்பெறச் செய்யும் குழுவின் பொது இணக்கப்பாட்டோடு, மேற்கொள்ளப்படல் வேண்டும்.

34. அரசியல் கட்சியொன்றினால் / வேட்பாளரொருவரினால் மேலே காட்டப்பட்டுள்ள வழிகாட்டு நெறிகளுக்கு முரணான விதத்தில் செய்யப்படுகின்ற கட்டளையொன்றை, கோரி க்கையொன்றை பிரச்சாரம் செய்வதற்கு அல்லது வெளியிடுவதற்கு ஊடக நிறுவனமொன்று அல்லது ஊடகவியலாளரொருவர் கட்டுப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சந்தர்ப்பமொன் றின் போது ஊடக நிறுவமொன்றிற்கு அல்லது ஊடகவியலாளரொருவருக்கு சட்டத்தின் உதவியை கோருவதற்குள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வூடக வழி காட்டு நெறிகள் வெளியிடப்பட்டிருப்பது நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அவசியமான சிறந்த நிலைமையொன்றை பேணி செல்வதற்காக என்பதால், இவ்வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாக செயற்படுவதற்கு ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவது மற்றும் இவ்வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாக செயற்படுவதற்கு தடையேற்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருப்பது அனைத்து அரசியற் கட்சிகள் / சுயேட்சைக் குழுக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள், கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள், அனைத்து பிரஜைகள் ஆகியோருக்கு கையளிக்கப்படுகின்ற பொறுப்பொன்றாகும். ஆகையால், இவ்வழிகாட்டி நெறிகளுக்கு இசைவாக செயற்படுவதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு உரிய அனைத்து தரப்பினரும் நடவடிக்கைகளையெடுப்பார்களென தேர்தல்கள் ஆணைக்குழு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் எதிர்பார்த்துள்ளார்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.
2015.07.19 ஆம் திகதி

### குறிப்பு

முன்னைய தேர்தல்களின்போது வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகளை அடிப்படை யாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரைவு, ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு சமர்ப்பிக் கப்பட்டதெனவும், அதன் பின்னர் அந்நிறுவனங்களின் தலைவர்களால் பெயர் குறிக்கப்பட்ட நிரந்தர முகவர்களுடன் கலந்துரையாடி எட்டப்பட்ட பொது இணக்கப்பாட்டோடு, இவ்வூடக வழி காட்டு நெறிகள் வெளியிடப்பட்டுள்ளதென்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

# இலங்கையில் ஜனநாயகம் பலம் பெறுமா?



இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தைப் பலப்படுத்து வதற்காகவும் அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அதிக ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காகவும் கடந்த ஜூன் மாத பிற்பகுதியில் நாடாளுமன்றைக் கலை த்தார்.

ஆகஸ்ட் 17 இல் இடம்பெறவுள்ள தேர்த லானது இலங்கையின் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ச பிரதமராவதற்கும் இதன ஊடாக நாட்டின் அரசியலிற்குள் நுழைவத ற்குமான வாய்ப்பை வழங்கியுள்ளது.

தான் அதிக வாக்குகளைப் பெற்று மீண் டும் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம் என் கின்ற கனவுடன் மகிந்த ராஜபக்ச கடந்த ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி னார். ஆனால் இத்தேர்தலில் ராஜபக்சவுக்கு எதிராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறி சேன அதிக வாக்குகளைப் பெற்று நாட்டின் ஜனாதிபதியானார். இது உண்மையில் எதிர் பார்க்கப்படாத ஒன்றாகும்.

ராஜபக்ச இலங்கையில் இரண்டு தடவை கள் தொடர்ச்சியாக ஜனா திபதியாகப் பணியாற் றியவர் என்ற வகையில் மக்களுக்கு இவரது அர சியல் நன்றாகத் தெரி யும். இலங்கையில் பல ஆண்டுகளாகத் தொட ரப்பட்ட உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்ற வகை யில் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தி யில் ராஜபக்ச பெரும் ஆதரவைப் பெற்றிருந்தார்.

ஆனால் இவர் தனது ஆட்சிக்காலத்தில் முன்னெடுத்த அதிகாரம் மிக்க அரசியல் தந்தி ரோபாயங்களால் மக்கள் மத்தியில் வெறுப் பையும் சம்பாதித்துள்ளார். இவரது ஆட்சிக் காலத்தில் மோசடிகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றன இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்ட போதி லும் இவற்றை எல்லாம் மகிந்த ராஜபக்ச நிராகரித்துள்ளார். இது தொடர்பான ஐ.நா போர்க் குற்ற அறிக்கை செப்ரெம்பரில் வெளி யிடப்படவுள்ளது.

ராஜபக்ச தேர்தலில் போட்டியிட முன்வந்த தானது சிறிசேனவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்குள் மிகவும் ஆழமான பிளவு ஏற்பட்டுள்ள தையே சுட்டிக்காட்டுகிறது.

மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே வாக் களித்தது போன்று அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான போதியளவு ஆதர வைப் பெற்றிராததாலேயே நாடாளுமன்றைக் கலைத்து தேர்தலை நடத்தத் தீர்மானித்தார்.

இது தொடர்பில் வாக்காளர்களின் ஆணை யைப் பெறுவதென சிறிசேன தீர்மானித்தார். ஐ.ம.சு.கூட்டணியின் உறுப்பினராக ராஜ பக்ச தேர்தலில் களமிறங்கத் தீர்மானித்துள் ளமை இலங்கையின் அரசியலில் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது. ராஜபக்சவிற் கும் சிறிசேனவிற்கும் இடையில் பல்வேறு கோட்பாட்டுசார் வேறுபாடுகள் காணப்படுகின் றன. ராஜபக்ச தனது ஆட்சிக்காலத்தில் சீனா வுடன் மிக நெருங்கிய உறவைப் பேணி னார். கொழும்புத் துறைமுகத்தில் சீனா தனது நீர்மூழ்கிக் கப்பல்களை நிறுத்துவத ற்கு ராஜபக்ச தனது அனுமதியை வழங்கியி ருந்தது மட்டுமன்றி, சீன வங்கிகளிடமிருந்து ஐந்து பில்லியன் டொலர்களும் இலங்கை யால் கடனாகப் பெறப்பட்டுள்ளது.

சீனக் கடன்கள் மற்றும் இலங்கையில் இடம்பெறும் சீனத் திட்டங்கள் தொடர்பான சிறி சேனவின் ஆதரவாளர்கள் கேள்வியெழு ப்பியுள்ளனர். சீனக் கடனின் 70 சதவீத த்தை கடன் வழங்குனர்களிடமிருந்து பெற்று வழங்குவதற்கான முயற்சிகளும் மேற் கொள்ளப்படுகிறது.

மகிந்த ராஜபக்ச ஆகஸ்ட்டில் இடம்பெற வுள்ள தேர்தலில் வெற்றி பெற்றால் தொடர்ந் தும் சீனாவுடன் ஒப்பந்தம் செய்வார் என சிலர் கூறுகின்றனர். ராஜபக்ச இத்தேர்தலின் ஊடாக இலங்கையின் பிரதமராக பதவி வகிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள் வார் என இவரது ஆதரவாளர்கள் கூறுகின் றனர். சிறிசேனவால் நிறைவேற்றப்பட்ட சில சட்ட சீர்திருத்தங்கள் மூலம் பிரதமராக வரு கின்ற எவரும் முன்னெப்போதும் இல்லாத வாறு அதிக அதிகாரங்களைப் பெற முடியும் என்பதாலேயே ராஜபக்ச பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் தாமும் நலன் பெறலாம் என இவரது ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

சிறிசேன இதுவரை வெளிப்படையாக ராஜபக்சவை ஆதரித்து கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை. இத்தேர்தலில் நடு நிலை வகிக்கப் போவதாக ஏற்கனவே சிறிசேன அறிவித்துள்ளார். 'ராஜபக்சவிற்கு ஆதரவாக இளைஞர்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஏனெனில் ராஜபக்ச தனது காலத்தில் இழைத்த பல்வேறு குற்றங்களை இந்த இளைஞர்கள் நன்கு உணர்வர். ராஜபக்சவின் அதிகாரத்துவ ஆட்சியை இவர்கள் நன்கறிவர்' என ஜூலை 14 அன்று இலங்கையின் ஜனாதிபதி தனது உரை யில் தெரிவித்திருந்தார்.

மகிந்த ராஜபக்சவின் பெயர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் உள்ளதால் இம்முறை நிச்சய மாக இக்கூட்டணி தோல்வியுறும் எனவும் சிறிசேன எதிர்வு கூறியுள்ளார்.

ரா்ஜபக்சவுக்கு எதிரான ஐ.ம.சு.கூட்டணி உறுப்பினர்கள் பலர் ஐக்கிய தேசிய முன் னணியுடன் இணைந்து தேர்தலில் போட்டி யிடவுள்ளனர். இந்த முன்னணியானது கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனவிற்கு ஆதரவளித்தி ருந்தது. இதன்மூலம் ரணிலின் தலை மையில் கடந்த ஜனவரியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆளுங்கட்சி யாகச் செயற்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றால் இலங்கையின் எதிர்கால அரசியலில் பல்வேறு சீர்திருத்தங்கள் இடம்பெறலாம். தற்போது இலங்கையின் ஜனநாயகம் சீரழிந்துள்ளது. இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டை ஆட்சி செய்தால் மீண்டும் இலங்கையில் ஜனநாய கம் பலம்பெறும் என எதிர்வு கூறப்படுகிறது.

-வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்
ஆசிரியர் தலையங்கம்-
நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் கூட்டணியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று கையளிக்கப்பட்டது.

"எதிர்காலத்திற்கான உத்தரவாதம்" என்ற கருப்பொருளில் அமைந்த இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இத்தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த ஐந்து வருடங்களில் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி அரசாங்கம் எவ்வாறு திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்தும் என்பதனை விபரிக்கின்றது. திட்ட அமுலாக்க வழிமுறைகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒரு நீண்ட கலந்துரையாடலையும் மேற்கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் விஞ்ஞாபனத்தின் தமிழ் மற்றும் சிங்கள பிரதிகளை முறையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர்களான டிலான் பெரேரா, தினேஷ் குணவர்தன, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஏ.எச்.எம்.பௌசி., டியூ.குணசேக்கர, பிரபா கணேசன் மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரும் இங்கு பிரசன்னமாகியிருந்தனர். (இ-7)

# மகிந்த சுனாமி நிதியினைத் துஷ்பிரயோகம் செய்தமைக்கு சாட்சியங்களுள்ளன-ரஞ்சன்

(கொழும்பு)

தமக்கு எதிராக சட்டக் கடிதம் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுப்பியமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ, தமது ஊழல்கள் தொடர்பில் பேசுவோரின் வாய்களை அடைப்பதற்காகவே இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாக ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ, எவ்வாறு சுனாமி நிவாரண நிதியை தமது சகோதரியின் கணக்குக்கு மாற்றி



நிதி துஷ்பிரயோகம் மேற்கொண்டார் என்பதை தம்மால் சாட்சிகளுடன் நிரூபிக்க முடியும் என்றும் இது தொடர்பில் முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வாவின் குரல் பதிவு தம்மிடம் உள்ளதாகவும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது கட்சிக்காரருக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாக கூறி மகிந்த ராஜபக்ஷவின் சட்டத்தரணி, அமைச்சர் மங்கள சமரவீர, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உட்பட்ட ஐவருக்கு சட்டக்கடிதம் அனுப்பவுள்ளதாக தெரிவித்தார்.

இந்தநிலையில் தாம் மகிந்த ராஜபக்ஷவை நீதிமன்றத்தில் சந்திக்க எதிர்பார்ப்பதாக ஜே.வி. பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சபாநாயகர் கதிரைக்கு மீண்டும் செல்லமாட்டேன்

## பதவியிலிருந்து பருப்புத்தான் சாப்பிட்டேன்- சமல்

ஐந்து வருடகாலமாக சபாநாயகர் பதவியிலிருந்து 'பருப்பு' சாப்பிட்டதாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். பெலியத்தை நகரில் ஞாயிறன்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவித்ததாவது, நான் மீண்டும் சபாநாயகர் கதிரைக்கு செல்லமாட்டேன். நான் இன்று இந்த மேடைக்கு வருகை தந்தது உங்கள் முன் உரையாற்றுவதற்கு அல்ல, எனது முகத்தை உங்களுக்கு காண்பிப்பதற்காகவே.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்வரும் 17ஆம் திகதி மகிந்தவை பிரதமராக்குவோம்.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இவற்றில் எவ்வித உண்மையுமில்லை. நாம் மேற்கொண்ட அபிவிருத்திகள் அனைத்தும் இடையில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. இவற்றை முன்னெடுத்து மீண்டும் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைவோம் எனவும் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## ரோசா



Botanical Name: Rosa damascena
Family: Rosaceae
Engl: Rose
Sinh: Rosa mal

சிறுசெடி அல்லது பெருஞ்செடி வகையைச் சேர்ந்தது ரோசா ஆகும். தனியிலை நிறைந்த மாற்றிலை அடுக்கும் கொண்டவை. முட்கள் நிறைந்த குத்துச் செடியாகும். தனிமலர் அல்லதுசமமட்ட மஞ்சரி (Corymb) இருபாலான பூக்கள். ஆரச் சமச்சீர் மலர் பெரும்பாலும் இடை மட்ட சூலகம் உடைய மலர்கள். புல்லி இதழ்கள் ஐந்து இணையவில்லை. அல்லி இதழ்கள் ஐந்தும் பூத்தளத்தின் விளிம்பில் பொருந்திக் காணப்படும். ரோசா காடுகளிலும் வளர்கின்றது. காட்டு ரோசாச் செடி நறுமணம் உடையதன்று. தண்டுத் துண்டங்கள் மூலமும் ஒட்டுமுறை மூலமும் இனவிருத்தி செய்யலாம். பொதுவாக பரம்பல் காணப்பட்ட போதும் இந்தியாவில் நறுமண எண்ணெய்க்காக ஆயிரம் அடி உயர பகுதிகளில் மலர்களுக்காக பயிரிடப்படுகின்றது.

பூக்களின் நிறவேற்றுமையில் வெள்ளை, இளஞ்சிவப்பு, நற்சிவப்பு,மஞ்சள், பச்சை, கலப்பு நிறம் போன்ற பூக்கள் பூட்பிக்கும் செடிகள் காணப்படுகின்றன. பொதுவாக ரோசாப்பூக்களுக்கு இனிப்பு, துவர்ப்புச் சுவைகள் காணப்படுகின்றன. ரோசாப்பூவிற்கு குலாப்பூ, ரோசாப்பூ, சிற்றாமரை போன்ற வேறு பெயர்களும் உண்டு.

சிற்றாமரைப்பூவால் சேர்த்த மலக் கட்டுவிடும்

ஒற்றவெப்பு தாகமதி ஓக்காளஞ் சற்றவிடா

மூல எரிவுத்த மூத்திரம் வயிற்றிசிவும்

பூதலம் விட்டேகும் புகல்

இதனால் சுரம், தாகம், ஓக்காளம், கீழ்வாய் எரிச்சல், வெள்ளை இவை தீரும்.

இதன் பூவிதழ்களைக் கொண்டு பன்னீர், வெந்நீர், ஊறல்நீர், மணப்பாகு, அத்தர் முதலியவைகள் செய்து வழங்கலாம். இது குளிர்ச்சியைத் தரும். இளைப்பைப் போக்கும். வளியைத் தன்னிலைப்படுத்தும். மனக் கலக்கத்தைப் போக்கும்.

பன்னீர் மிகக்குளிர்ச்சி பாராய் ககசன்னிக்

கிந்நீருண் ஏகும் இளைப்பு மறுஞ் சன்னிளும்

வாதபித்த ஐயமொரு மானே! வியாகுலமும்

பூதலம் விட்டேகும் புகல்

பூவிதழ்கள் 1500 கிராம், நீர் 4200 மில்லி வாலையிலிட்டு காய்ச்சி பதத்தில் இறக்கிக் கொள்ளவும். இறை சந்தனங்களோடு மணத்திற்காகவும் கிளிம்பு, கிலேதம் முதலியவைகள் உறவாகவும் சேர்த்துக் கொள்ளலாம். முற்கூறியபடி தயாரித்த ரோசாப் பன்னீரை கண்ணிற்கு சொட்டு மருந்தாகப் பாவிக்கலாம்.

ரோஜா இதழ்களைச் சமைத்துச் சாப்பிட்டால் உடல் சுறுசுறுப்படையும். ரோஜாப்பூவில் சர்பத் தயாரித்துக் குடித்துவந்தால் மூலச்சூடு குணமாகும். ரோஜாப்பூவை மூக்கடைப்பு உடையவர்கள் முகர்ந்தால் மூக்கடைப்பு குணமாகும். ரோஜா இதழ்களை காய வைத்து குடிநீர் காய்ச்சி குடித்து வந்தால் இதய நோய்கள் குணமாகும்.

உலர்ந்த ரோஜா இதழ்களை சுக்கு, ஏலக்காய் ஒவ்வொன்றும் 100 கிராம் அளவு எடுத்து உலர்த்தி பொடித்து, அரித்து வைத்துக் கொள்ளவும். காலை, மாலை இருவேளையும் 2 கிராம் வீதம் தேனில் சாப்பிட்டுவர இரத்த அழுத்த நோய் குணமாகி கெட்ட கொழுப்பும் கரையும்.

ரோஜா, செம்பருத்திப்பூ, பாசிப் பயறு, அதிமதுரம் அனைத்தையும் சமஅளவு எடுத்து , அரைத்து தினமும் உடலில் பூசி அரைமணிநேரம் ஊறவிட்டுக் குளித்து வந்தால் தோல் நோய்கள் அணுகாது. உடல் வனப்புப் பெறும்.

ரோஜாப்பூ, நிலாவாரை, வாய் விளங்கம் ஒவ்வொன்றும் 100 கிராம் அளவு எடுத்துப் பொடிசெய்து அரித்து அதில் 5 கிராம் இரவில் சாப்பிட்டு வந்தால் மலக்கட்டு நீங்கி மலம் இலகுவாக வெளியேறும். ரோஜாப்பூ, வெள்ளை மிளகு, சுக்கு ஒவ்வொன்றும் 50 கிராம் அளவு எடுத்து அரைத்துதினமும் காலை, மாலை இருவேளையும் 5 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் உடற்பருமன் குறையும். இரவில் நன்றாக தூக்கமும் வரும்.

5தேக்கரண்டி அளவு பன்னீர் காலை, மாலை சாப்பிட்டால் உடல் உஷ்ணம் தணியும். மயக்கம், கிறுகிறுப்பு நீங்கும். உதடு, வறட்சி, வெடிப்பு நீங்கி, உதடு மென்மையானதாகவும் சிவப்பாகவும் வருவதற்கு ஒலிவ் எண்ணெய் -2 தேக்கரண்டி, சாதிக்காய்-2, தேன் மெழுகு-2 கிராம், பன்னீர்- 2 தேக்கரண்டி இவற்றில் தேன் மெழுகை உருக்கி ஒலிவ் எண்ணெய் பன்னீருடன் கலந்து கொள்ளவும். சாதிக்காயை தோல் நீக்கி பொடித்து, அரித்து கலந்து கொள்ளவும். கிறீம்போல் ஆகும் வரை தயாரித்து வைத்துக்கொள்ளவும். உதட்டில் பூசிவர மேற்படி பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்.

இளஞ்சிவப்பு நிறப்பூக்களின் இதழ்களில் நல்ல வாசனையுடன் மருத்துவ குணமுடைய அவசியமான தைலச்சத்துக்களும் உள்ளன.

சிவப்பு நிறம் தரும் பொருட்களுடன் அமிலங்களும் உள்ளன. குளுக்கோசைட்டு, கிவிர்திகிட்ரின் (Quercitin) முதலிய சத்துக்களும் இருக்கின்றன. மேலும் காலிக்கமிலம், வாசனை தரும் தைலம் உள்ளன. பூவிதழ்களில் இலேசான துவர்ப்புச் சத்துள்ளது.

புண்களை இது ஆற்றும். உடல் முழுவதும் பலம் தந்து இருதயத்திற்கும் நரம்பிற்கும் வன்மை தரும். தொண்டை நோய்கள், சளி, இருமல், நாவறட்சி குணமாகும். பெண்களின் கர்ப்பப்பை சம்பந்த மான நோய்கள் குணமாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி முறைமையில் அதிகாரத்தைப் பகிரத்தயார்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

**தேசியப் பிரச்சினை தீர்வுக்காக அதிகாரத்தை பகிர்வதில் எமக்கு எந்த பிரச்சினையும் கிடையாது. எனினும் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரத்தை பகிர்வதே அரசாங்கத்தின் திட்டமாகும். அரசின் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமுமில்லை. புதிய பாராளுமன்றத்தினூடாக இதற்கான விசேட பொறிமுறைகளை நாம் மேற்கொள்வோம் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார.**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரததை பகிரும் பொறி முறையை நாம் ஆரம்பிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டதுடன் அதில் சமஷ்டி முறைமை தீர்வு வேண்டும் என கூறப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் வினவிய போது ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களான வடக்கு கிழக்கிற்கு சமஷ்டி கொள்கையின் பிரகாரம் அதி உச்ச அதிகாரப்பகிர்வே இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வாக அமையும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தினூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய பிரச்சினைக்காக அதிகாரத்தை பகிர்வதனால் எமக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. நாட்டின் தேசிய பிரச்சினை தீர்க்கப்பட்டு இனாங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். இதனூடாக நாட்டை வளர்ச்சிக்குட்படுத்த முடியும். ஆகவே ஒற் றையாட்சிக்குள் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான குறிக்கோளாகும்.

இருந்தபோதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுப்பட்ட இலங்கைக்குள் சமஷ்டி தீர்வையே வேண்டி நிற்கின்றது. எனவே கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் தொடர்பில் எம்மால் தட்டிக்கழித்து விட்டு செயற்பட முடியாது. எனினும் எவருடைய நிலைப்பாடுகள் எதுவாக இருப்பினும் அது எமக்கு பிரச்சினை இல்லை.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தை பகிர்வதே தேசிய பிரச்சினைக்கு உரிய தீர்வாகும். குறித்த தீர்வு அனைத்து இனத்தவர்களுக்கும் சாதகமானதாக அமையும்.

எனவே அரசாங்கத்தின் நிலைப்பாட் டில் மாற்றமில்லை. தமிழ தேசியக் கூட்டமைப்பின் யோச னையை மாத்திரம் எம்மால் செவிமடுக்க முடியாது.

அனைத்து தரப்பினரினும யோசனைகளை செவி மடுத்து ஒற்றையாட்சிக்குள் அதிகாரததை பகிர்வதே அரசின் நோக்கமாகும். இதற்காக தேசியப் பிரசசினை தீர்வு விடயத்தில்விசேட பொறிமுறை ஒன்றை புதிய பாராளுமன்றத்தினூடாக ஆரம்பிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## டிரான் அலஸ்

# ஜூலை 30வரை கைது செய்யப்படமாட்டாராம்

ராடா நிதி மோசடி தொடர்புடைய வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளமையால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸை நாளை வரை கைது செய்ய மாட்டோம் என்று சட்டமா அதிபர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமனற உறுப்பினர் டிரான் அலஸை ஜூலை மாதம் 10ஆம் திகதி வரையில் கைது செய்யமாட்டோம் என்று சட்டமா அதிபர், ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 200 | 300 | 200 |
| தக்காளி | 150 | 120 | 120 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 80 | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 140 | 200 | 120 |
| பூசணி | 50 | 30 | 30 | 60 | 30 |
| புடோல் | 50 | 40 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120-160 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 120 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 110 | 120 | 80 |
| பீற்றூட் | 100 | 80 | — | 100 | 70 |
| கறிமிளகாய் | 200 | 150 | 160 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 120 | 120 | 120 |
| போஞ்சி | 200 | 140 | 180 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 80 | 50 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 60 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-40 | 40 | 35-40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 160 | 100 | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 140 | — | 200 | 180 |
| முள்ளங்கி | 40 | 30 | 80 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 25 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 446

Search for people, places and things Nagendram Home

சுஜன் செல்வா




கிரிதரன் கிரி




சிவா கணேஸ்




பாய் வாமன்




அன்ரோ மெரீனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றியுள்ள நண்பன்



**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**

**அன்றே மறப்பது நன்று.**

**ஒருவர் நமக்கு செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல.**

**அவர் செய்த தீமையை அக்கணமே மறந்து விடுவ்து நல்லது.**

மருத நாட்டு இளவரசன் வீரசிம்மனும், ஏழைக் குடும்பத்தில் பிறந்த கலைதாசனும் ஒரே குருகுலத்தில் பயின்ற போது இணைபிரியா நண்பர்களாக இருந்தனர். வீரசிம்மன் மன்னனாக முடிசூடியதும், பழைப நட்பை மறக்காமல் கவிதைகள் புனைவதில் வல்லவனான கலைதாசனை தனது ஆஸ்தான கவிஞனாக்கினான். அன்று முதல் ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டு வசதியான வாழ்க்கையை கலைதாசன் வாழ்ந்தான்.

அரசவையில் இடம் கிடைத்தாலும், கடவுள் அளித்த கவிதை எழுதும் திறமையை கடவுளுக்காக மட்டுமே பயன்படுத்துவதில் உறுதியாக இருந்த கலைதாசன், கடவுள் துதிப் பாடல்கள் எழுதுவதில் மட்டுமே ஆர்வம் காட்டினான்.

கலைதாசன் மீது பொறாமை கொண்டிருந்த மற்ற அரசவைக் கவிஞர்கள் இதனை சாதகமாக்கிக் கொண்டு, அவனைப் பற்றி மன்னனிடம் தவறாக சொல்லிக் கொடுத்தனர். அதனால் வீரசிம்மன் மனம் சஞ்சலமடைந்தது. ஒருநாள் கலைதாசனை அழைத்த வீரசிம்மன், தன்னைப் பற்றி புகழ்ந்து கவிதை பாடுமாறு கேட்டான். ஆனால் தான் கடவுளைத் தவிர வேறு யாரையும் புகழ்ந்து பாடுவதில்லை என கலைதாசன் மறுத்து விட்டான். ஏற்கனவே சஞ்சலத்தில் இருந்த வீரசிம்மன் இப்போது கடும் கோபம் கொண்டு கலைதாசனை பதவியிலிருந்து நீக்கியதோடு, அவனை நாடு கடத்தி காட்டில் வாழும்படி உத்தரவிட்டான்.

சில மாதங்கள் கழித்து காட்டுக்கு வேட்டையாடச் சென்ற வீரசிம்மன், பாதை மாறிச் சென்று வழி தெரியாமல் காட்டுக்குள் திண்டாடினான். அப்போது சூறைக் காற்று வீசியதால் மரம் ஒன்று முறிந்து அவன் மீது சாய்ந்தது. பலத்த காயங்களோடு மரத்திறன் அடியில் தவித்துக்கொண்டிருந்தான். காட்டில் வசித்து வந்த கலைதாசன் அவ்வழியே செல்லும் போது வீரசிம்மனைப் பார்த்து அவனைக் காப்பாற்றி தன் குடிசைக்கு தூக்கிச் சென்று சிகிச்சை அளித்தான்.

கலைதாசனின் பராமரிப்பால் உடல் நலம் தேறிய வீரசிம்மன் கண்ணீர் மல்க, "நண்பா, உனக்கு தீங்கிழைத்த போதும் நீ என் மேல் இவ்வளவு பரிவு காட்டுகிறாயே.. என் மீது கோபம் இல்லையா?" எனக் கேட்டான்.

"அரசே, ஏழையாய் இருந்த என்னை ஆஸ்தானக் கவிஞனாக்கி நல்வாழ்வு அளித்தீர்கள். அரசருடைய கட்டளையை ஏற்காதவன் தண்டனைக்கு உரியவனாவான். அதனடிப்படையில் நீங்கள் செய்தது தீங்கல்ல. ஆகவேதான் நீங்கள் அளித்த தண்டனையை உடனே மறந்து விட்டேன். நீங்கள் எனக்கு செய்த நன்மையை மட்டுமே நினைவில் வைததுள்ளேன்" என கலைதாசன் பதிலளித்தான்.

இதைக் கேட்டு தன் செயலுக்காக வருந்திய வீரசிம்மன், "நண்பா! உன்னுடைய தண்டனையை இந்த வினாடியே ரத்து செய்கிறேன். உடனே அரண்மனைக்கு திரும்பு" எனக் கூறி கலைதாசனை கட்டியணைத்துக் கொண்டான்.

## பெனிட்டோ முசோலினி



பெனிட்டோ அமில்கார் அன்டிரியா முசோலினி ஜூலை 29, 1883 ஆம் ஆண்டு ரொமக்னா என்னும் ஊரிலுள்ள போர்லி மாகாணத்திலுள்ள டோவியா டை பிரிடாப்பியோ என்னும் நகரத்தில் ஓர் உழைக்கும் பாட்டாளியின் குடும்பத்தில் பிறந்தார். இவர் இத்தாலி நாட்டுக்கு 1922 - 1943 காலப்பகுதியில் தலைமை வகித்தவர்.

இத்தாலிய அரசை பாசிச் அரசாக மாற்றி ஏகபோக சர்வாதிகார ஆட்சியை முசோலினி நடத்தினார். அரச கட்டமைப்புகளையும், தனியார் நிறுவனங்களையும், ஊடகங்களையும், திறனாளர்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து வன்முறை, பரப்புரை, ஏகபோக அணுகுமுறை ஊடாக பாசிச அரசை உருவாக்கி பேணினார்.

ஹிட்லருடன் சேர்ந்து இரண்டாம் உலகப் போரின் போது நேச நாடுகளுக்கு எதிராகப் போரிட்டுத் தோற்றார். ஏப்ரல் 1945 இல், முசோலினி தம் மனைவி கிளாரா பெட்டாசியுடன் சுவிட்சர்லாந்துக்குத் தப்பியோட முற்படுகையில், இத்தாலியின் கோமோ ஆற்றின் அருகில் பார்ட்டிசான்களால் பிடிபட்டு பின் அவரும் அவர் மனைவியும் சுட்டு கொல்லப்பட்டனர். இவரது உடல் மிலானுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஒரு எண்ணெய் விற்பனை நிலையத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இவர் பெற்றோருக்கு இவரே மூத்தவர் இவரின் உடன் பிறந்தோர் அமால்டோ முசோலினி மற்றும் எட்விக் முசோலினி. இவர் தந்தை பெயர் அலெக்சாண்ட்ரோ முசோலினி. இவர் ஒரு இரும்பு அடிக்கும் கொல்லர். இவர் தாய் ரோசா முசோலினி ஆசிரியை. இவர் தாய் கத்தோலிக்க மதத்தில் அதிக இறை பற்றுடையவர்.

முசோலினி சிறு வயதில் தன் தந்தையின் தொழிலுக்கு மிகவும் உதவி புரிந்தார். தந்தையாரின் சீர்திருத்தக் கொள்கையினால் அவருக்கு ஞானஸ்நானம் செய்யப்படவில்லை. தன் தந்தையின் பொதுவுடமை, சீர்திருத்த கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அதன் காரணமாக மெக்சிக்கன் சீர்திருத்தவாதியான பெனிட்டோ ஜீவாரசின் பெயரை தன் பெயரோடு சேர்த்து பெனிடடோ முசோலினி என்று மாற்றி கொண்டார். பிறகு விடுதிப்பள்ளி ஒன்றில சேர்க்கப்பட்டார் அப்பள்ளியில் இவர் செய்த குறும்புகளின் காரணமாக பள்ளியைவிட்டு நீக்கப்பட்டு வேறு பள்ளியில் சேர்க்கப்பட்டார், அங்கு சிறப்பானதொரு கல்வி பயின்றார். 1901 ஆம் ஆண்டு பள்ளி இறுதி தேர்வுக்குப்பின் தொடக்க கல்வி ஆசிரியராக அப்பள்ளியிலேயே நியமிக்கப்பட்டார்.

1902 ம் ஆண்டு முசோலினி தன் சொந்த மண்ணை விட்டு சுவிட்சர்லாந்துக்கு குடியேறினார். அங்கு வேலை கிடைக்காமல் குடும்ப வறுமைக்கு தள்ளபட்டார். அதன் சோசலிச இயக்கத்தில் சேர்ந்ததனினால் இத்தாலிக்கு நாடு கடத்தப்பட்டு அங்கு தன்னிச்சையாக இராணுவத்தில் சேர்ந்து பணி புரிந்தார். அவருடைய இராணுவப்பணியில் குறைகள் குற்றங்கள் ஏதுமின்றி சிறப்பான பணி புரிந்தார். இத்தகவல்கள் அவருடைய இராணுவத் தொழில் குறிப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1917 வரை இராணுவத்தில் சிறப்பானதொரு பணிபுரிந்தமையால் 40 க்கும் அதிகமான பதக்கங்கள் அவர் உடையை அலங்கரித்தன.

முதலாம் உலகப் போரில் நேச நாட்டு படைபிரிவுக்காக பணிபுரிந்து திரும்பியவுடன் தன் சோசலிச கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சோசலிசம் தோற்றுப்போன ஒன்று. ஆகையால் தன்னை கொடூரகுணம் கொண்ட மனிதனாக மாற்றிக்கொண்டார்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1899 - முதலாவது ஹேக் ஒப்பந்தம் நெதர்லாந்தில் ஹேக் என்ற இடத்தில் கைச்சாத்திடப்பட்டது.
- 1900 - இத்தாலியில், முதலாம் உம்பேர்ட்டோ மன்னர் கொலை செய்யப்பட்டார்.
- 1921 - ஹிட்லர் ஜேர்மன் தேசிய சோசலிச தொழிலாளர் கட்சியின் த்லைவரானார்.
- 1944 - இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 - இரண்டாம் உலகப் போர் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மீண்டும் லண்டனில் ஆரம்பமாகின.
- 1957 - அணு சக்தியின் அமைதிவழி பயன்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக பன்னாட்டு அணுசகதி முகமையகம் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1959 - ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி நிறுவனம் நாசா ஆரம்பிக்கப்பட்டது.
- 1981 - வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா திருமணம் நடைபெற்றது.
- 1987 - ஆங்கிலக் கால்வாயூடாக யூரோ சுரங்கம் அமைப்பதற்கான உடன்படிக்கையில் ஐக்கிய இராச்சிய பிரதமர் மார்கரட் தாட்சர், மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா மித்தரான் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.
- 1987 - இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.
- 1987 - இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பில் இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின்போது இலங்கை இராணுவத்தினன் ஒருவரால் துப்பாக்கியால் தலையில் குத்தப்பட்டு காயம் அடைந்தார்.
- 1999 - இலங்கையின் தமிழ் அரசியல்வாதி நீலன் திருச்செல்வம் தற்கொலை குண்டுவெடிப்பில் படுகொலை செய்யப்பட்டார்.
- 2005 - ஏரிஸ் (குறுங்கோள்) கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- **1883 - முசோலினி, இத்தாலிய சர்வாதிகாரி (இ. 1945)**
- 1904 - ஜே.ஆர்.டி.டாடா, இந்தியத் தொழிலதிபர் (இ. 1993)
- 1905 - டாக் ஹமாஷெல்ட், ஐக்கிய நாடுகள் அவையின் 2 ஆவது பொதுச் செயலர் (இ. 1961)

### இறப்புகள்

- 1913 - டோபியாஸ் மைக்கல் ஆசர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1838)
- 1974 - கருமுத்து தியாகராஜன், இந்தியத் தொழிலதிபர் (பி. 1893)
- 2009 - காயத்திரி தேவி, ஜெய்ப்பூர் மகாராணி (பி. 1920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தினை தூண்ட வேண்டாம்

## அரசு வேண்டுகோள்

**இனவாதத்தைத் தூண்டி அரசியல் செய்வதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் உடன் நிறுத்திக் கொள்ளவேண்டும். தேர்தல் மேடைகளில் இனவாத கருத்துக்களைக் கூறி நாட்டை தீயிட்டு நாசமாக்க முனையக்கூடாது. ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே அதிகாரப் பரவலாக்கம் என்பதே எமது நிலைப்பாடாகும் என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இதன் பிரகாரம் இனவாதத்தைத் தூண்டி நாட்டை அராஜகப் போக்கிற்கு கொண்டு செல்லும் விமல் வீரவன்சவிற்கு அடிபணிந்த கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பின்தள்ளப்பட்டமை கவலையளிக்கக் கூடியதாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் சிறுப்பான்மை அரசாங்கம் வழங்கிய சலுகையின் காரணமாக ஒரு குடும்பத்திற்கு 6 ஆயிரத்து 500 ரூபாவை சேமிக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் ஆணையை மதிக்காமல் மீளவும் தேர்தலில் களமிறங்கியுள்ளார். இத்தகைய செய்ற்பாடு மிகவும் கவலையளிக்க் கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் இம்முறை பாராளுமன்ற தேர்தலிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வி காண்பது உறுதியாகும்.

தனது பிறப்பிடமான அம்பாந்தோட்டை மாவட்டத்தில் களமிறங்க பயந்து குருநாகல் மாவட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ க்ளமிறங்குகின்றார். இருந்த போதிலும் குருநாகலில் வாக்கெடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவினால் முடிந்தாலும் கூட அவரினால் அங்கு வாக்களிக்க முடியாது. அவர் மெதமுலனவிற்கே செல்ல வேண்டும்.

இந்நிலையில் தற்போது மகிந்த ராஜபக்ஷ தோல்வியின் மீது அச்சம் கொண்டு நாளுக்கு் நாள் தோல்வி அடைவதற்கான சந்தர்ப்பத்தை அறிந்துக்கொண்டிருக்கின்றார். இந்நிலையில் தன்னுடைய கட்சி தோல்வி அடையும் என்பதனை அறிந்ததன் விளைவாக பல்வேறு சலுகைகளை வழங்கப் போவதாக கூறிவருகின்றார்.

சுமார் 20 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்தும் கூட சலுகைகளை வழங்க முற்படாத மகிந்த ராஜபகஷ தற்போது மக்களை ஏமாற்றும் வகையில் நாட்டு மக்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கப்போவதாக கூறுகின்றார்.

பல்கலைக்கழக மாணவர்களின புலமைப்பரிசிலை 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதாக கூறுகின்றார். எனினும் நல்லாட்சியில் ஏற்கனவே குறித்த சலுகைகளை வழங்கிவிட்டோம். எனவே இனிமேலும் மகிநத ஆட்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. 20 வருடங்களாக வழங்காத சலுகையை மகிந்தவினால் இதற்கு பின்னரும் வழங்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவுக்கு அடிபணிந்துதான் ஐ.தே.கவுக்கு கூட்டமைப்பு ஆதரவு

## வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

ஒற்றையாட்சிக்குள் இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்று மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சமாகும் எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணிந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.தே.க.வுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில், அதிகாரப் பரவலாக்கலை நாம் எதிர்க்கவில்லை. மாகாண சபைகளுடன் ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தை பரவலாக்குவோம்.

அவ்வாறு அதிகாரத்தை பரவலாக்கும் போது இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்று அதிகாரங்கள் வழங்கப்படும்.இது விடயத்தல்



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணக்கப்பாடு கண்டுள்ளதோடு அதன் கொள்கைப் பிரகடனத்திலும் இது உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதிகாரத்தை பரவலாக்குவது தொடர்பாக ஐ.தே.க.விடம் நிலையான கொள்கையில்லை. சமஷ்டி முறையில் தீர்வு என்றும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்றும் மாறுபட்ட நிலைப்பாடுகளில் ஐ.தே.க. பயணிக்கின்றது.

வரலாற்றுக் காலம் அதாவது சுதந்திரத்திற்கு பின்னர் ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலேயே தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படாது மறுக்கப்பட்டது.பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியாமல் அதனை ஐ.தே.க.வே தடுத்தது.

1983 இல் ஜூலை இனக் கலவரத்தை ஏற்படுத்தி வடக்கு தமிழ் மக்களை அடக்குமுறைக்குள்ளாக்கி அங்குள்ள இளைஞர்களை ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளிவிட்டது.

இவ்வாறு தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை ஐ.தே.க. வே கட்டவிழ்த்து விட்டது. இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவின் அடக்குமுறைக்கு அடிபணிந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆட்சியைப் பெற்றுக் கொடுத்து தமக்கு தேவையான விதத்தில் இலங்கையில் ஆட்சியை வழி நடத்துவதே அமெரிக்காவின் திட்டமாகும்.

அதற்காகவே கூட்டணி மீது அமெரிக்கா அழுத்தம் ஆதரவு வழங்கச் செய்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ இனவாதியல்ல என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஒற்றுமை

ஒரு ஊரில் அண்ணன், தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுடைய தந்தை கடைசியாக அவர்களுக்கென்று விட்டிட்டுப் போன சொத்து.

ஒரு மாமரம், ஒரு பசுமாடு, ஒரு போர்வை இவ்வளவு தான். இந்த மூன்றையும் அவர்கள் இருவரும் ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொள்ள் வேண்டும்.

எப்படிப் பாகம் பிரிப்பது? எப்படி பங்கு போட்டுக் கொள்வது? எல்லாவற்றையும் சரிபாதியாக வெட்டி ஆளுக்கு அரைவாசியாகவா எடுத்துக் கொள்ள முடியும்? அண்ணன்காரன் ஒரு மக்கு. என்ன சொன்னாலும் தலையாட்டிக் கொண்டு போவான். தம்பிக்காரன் புத்திசாலி. இருந்தாலும் அந்தப் புத்தி சாலித்தனத்தை தவறாக உபயோகப்படுத்தக் கூடியவன்.

அந்தத் தம்பி அண்ணனிடம் சொன்னாள்.

"அண்ணா நம்முடைய அப்பா நமக்காக விட்டுட்டுப் போன சொத்தை நாமிருவரும் ஒற்றுமையாக இருந்து பிரித்துக் கொள்ளலாம். ஊரைக் கூட்டி பஞ்சாயத்து பண்ண வேண்டிய அவசியமில்லை" என்றான்.

"அப்படியானால் சரி, தம்பி நீயே அதைப் பங்கு போடு" என்றான் அண்ணன்.

தம்பி யோசித்தான் அதற்குப் பின் சொன்னான்.

"அண்ணா, நீங்கள் வயதில் மூத்தவர். அதனால் மூன்று விடயத்திலும் உங்களுக்குத் தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம். முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதில் அடிப்பாகம் தான் வலுவானது. அதனால் அந்த மரத்தின் அரைவாசிக்குக் கீழ் உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் முழுவதும் உங்களுக்கு. மேல்பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருப்பது எனக்கு இருக்கட்டும். அடுத்ததாக அந்தப் பசுமாடு.

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அதனால் அந்த மாட்டின் தலைப்பாகம் உங்களுக்கு. பின்பக்கம் எனக்கு இருந்து விட்டுப் போகட்டும். அடுத்து அந்தப் போர்வை. "அதைப் பகல் முழுவதும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இரவு முழுவதும் நான் வைத்துக் கொள்கிறேன்" என்றான் தம்பி.

விபரம் புரியாத அண்ணன் சரியென்று ஒத்துக் கொண்டான். அதற்குப் பின் என்ன ஆயிற்று தெரியுமா? அண்ணன் அந்த மரத்துக்கு உரமிட்டான். நீர் பாய்ச்சினான். தம்பி ஜாலியாக மரத்தின் மேல் உட்கார்ந்து பழத்தையெல்லாம் பறித்துக் கொண்டிருந்தான். அண்ணன் பசுமாட்டுக்குத் தீனி வைத்தான். புல்லை அள்ளி வந்து போட்டான். தண்ணீர் வைத்தான். தம்பி தன்பாட்டுக்கு பால் கறந்து கோப்பி போட்டு குடித்துக் கொண்டிருந்தான்.

அண்ணன் பகல் முழுவதும் அந்தப் போர்வையை சும்மா மடித்து வைத்திருந்தான். தம்பி ஜாலியாக இராத்திரியில் அதை வாங்கிப் போர்த்திக் கொண்டு தூங்கினான். இப்படியே நடந்து கொண்டிருந்தது. இதை பக்கத்து வீட்டுக்காரன் ஒருநாள் கவனித்தான் நடப்பது நியாயமில்லை என்பதைப் புரிந்து கொண்டான் உடனே அந்த அண்ணனை இரகசியமாக ஒருநாள் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து சில யோசனைகளை சொல்லி, இனிமேல் இப்படி நடந்து கொள் என்று சொன்னான். அவனும் சரியென்று சொல்லி தலையாட்டி விட்டுப்போனான். அதன் பின் என்ன ஆயிற்று தெரியுமா? அண்ணன் மரத்துக்கு உரம் வைப்பது தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான். பின் ஒரு கோடரியை எடுத்து வந்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான். தம்பி பதறிப்போய் "என்னண்ணே இப்படிசெய்கிறீர்கள்?" என்றான்.

"என்னுடைய பங்கில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன்னுடைய பங்கிலேயா நான் வெட்டுகிறேன்?" என்று கேட்டான்.மாட்டுக்குத் தீனி வைப்பதையும் தண்ணீர் வைப்பதையும் நிறுத்தினான். தம்பியால் பால்கறக்க முடியவில்லை. தவித்துப் போய் விட்டான்.

அந்தப் போர்வையை பகல் முழுவதும் அண்ணன் வைத்திருந்து இரவு நேரம் வருவதற்குள் அதை தண்ணீரில் நனைத்து தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக் கொள்ள முடியவில்லை. அதன் பின் அண்ணனிடம் சமரசம் செய்து கொண்டு நியாயமாக நடக்க ஆரம்பித்தானாம் அந்தத் தம்பி. ஒற்றுமையாக வாழ்வதிலும் ஒழுங்கு முறை வேண்டுமென்பது இதிலிருந்து புரிகிறதல்லவா! ஒருத்தன் சொன்னான்.


"என்னுடைய எதிர் வீட்டுக்காரனிடம் நான் மிகவும் பிரியமாக நடந்து கொண்டேன். அவனை என்னுடன் கூடப்பிறந்த தம்பியாக நினைத்துப் பழகினேன். தம்பியென்று தான் கூப்பிடுவேன். அதுதான் இப்பொழுது வில்லங்கமாகி விட்டது" என்றான்.

"ஏன்?" என்று கேட்டேன். "அவனும் அதை நிஜமென்று நினைத்துக் கொண்டு இப்பொழுது என்னுடைய சொத்தில் பங்கு கேட்கிறான் சேர்" என்றான் மிகவும் வேதனையோடு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பி.காய்ச்சல்!



ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான காய்ச்சல் வருகின்றமை பற்றி நாம் அறிவோம். மலேரியா காய்ச்சல் ஒரு காலத்தில் அச்சுறுத்தியது. ஆனால், இப்போது இல்லை. சில வருடங்களுக்கு முன்பு சிக்கன்குனியா எனும் காய்ச்சலொன்று வந்து, சனங்களை "அடித்து முறித்து"ப் போட்டது. இப்போது, டெங்குக் காய்ச்சல் சீசன்.

அரசியலிலும் சில வகையான காய்ச்சல்கள் இருக்கின்றன. அவற்றில் ஒரு சில காய்ச்சல்கள், தானாக வந்து - தானாகப் போய்விடும். இன்னும் சில வகைக் காய்ச்சல்கள் - மருந்து கொடுத்தால்தான் சுகப்படும். ஒன்றிரெண்டு வகைக் காய்ச்சல்களுக்கு மருந்தேயில்லை.

இது பொதுத் தேர்தல் காலம். அம்பாறை மாவட்டமெங்கும் எம்.பி. காய்ச்சல். அதிலும், முஸ்லிம் பிரதேசங்களில் காய்ச்சலின் சூடு அதிகம். கிட்டத்தட்ட ஒவ்வொரு ஊருக்கும் எம்.பி. வேண்டுமென்கிற அளவுக்கு, காய்ச்சல் தீவிரமடைந்துள்ளது.

**குறுகிப் போன மனநிலை**

மக்களெல்லோரும் சமூகம் சார்ந்து யோசித்த ஒரு காலமிருந்தது. தமது சமூகத்துக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களைப் பெற்றெடுக்க வேண்டும் என்கிற பேரார்வம் - அப்போது மக்களிடமிருந்தது. பிறகு, சமூகம் சார் அக்கறை சுருங்கிச் சுருங்கி, இப்போது பிரதேசவாதமாக மாறிப்போய், "எங்கள் ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற கோசத்தில் வந்து நிற்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் இந்தக் காய்ச்சலை ஒரு தசாப்தத்துக்கு முன்னர் உருவாக்கிவிட்ட முஸ்லிம் அரசியல்வாதியாரென்பதை, சொல்லித் தெரிய வேண்டிய அவசியம், அந்த மாவட்ட மக்களுக்கு இல்லை. அந்த அரசியல்வாதி உருவாக்கிவிட்ட காய்ச்சல், இப்போது - அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசமெங்கும் பரவியுள்ளது. இந்த நிலைவரமானது, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகம் பெறுவதற்கு, உச்சபட்ச சாத்தியமுள்ள நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கையில், மண்ணைத்தூவி விடக்கூடிய அபாயமொன்றினை ஏற்படுத்தி விட்டுள்ளமைதான் கவலையான விடயமாகும்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை, எந்தக் கட்சியினூடாக அதிக முஸ்லிம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களைப் பெற முடியும் என்பதை, அரசியல் தெரிந்தவர்கள் அறிவார்கள். சில பிரதேசங்கள் - தலைகீழாக நின்றாலும், நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொள்ள முடியாது. காரணம், அவர்களிடமுள்ள வாக்குகளின் எண்ணிக்கை போதாது. சில பிரதேசங்கள், குறித்ததொரு கட்சியினை ஆதரிப்பதனூடாகத்தான் தமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். சில பிரதேசங்கள், வேறுசில பிரதேசங்களின் ஆதரவுடன்தான் தமக்கான நாடாளுமன்ற உறுப்பினரை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இவைதான் அங்குள்ள அரசியல், களநிலைவரங்களாகும்.

ஆனால், "ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற காய்ச்சல் வந்த பிறகு, மேற்சொன்ன யதார்த்தங்கள் எவற்றினையும் யோசிக்கும் மனநிலையில் அதிகமானோர் இல்லை. அவரவர், தத்தமது பிரதேச வேட்பாளருக்குப் புள்ளடியிட்டு, தமது காய்ச்சலைத் தீர்த்துக்கொள்ளலாமென நினைக்கின்றனர். இந்த நிலைப்பாடானது, கடைசியில் முஸ்லிம் சமூகத்துக்குக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களைத்தான் சிதறடித்து விடப்போகிறது.

முதலில், "ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற காய்ச்சலிலிருந்து, அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்கள் விடுபடுதல் வேண்டும். யதார்த்தம் என்று ஒன்றுள்ளது. அவை, சிலவேளைகளில் நமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கக் கூடும். அந்த யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, அவற்றினூடாக அரசியற் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற போதுதான், சமூகம் சார்ந்து சில வெற்றிகளை பெற்றுக் கொள்ளலாம்.

அம்பாறை மாவட்டத்தில், இம்முறை தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் முஸ்லிம் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகம். அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மயில் கட்சி, இம் மாவட்டத்தில் புதிதாக வந்து - தனித்துப் போட்டியிடுகிறது. இதனால், முஸ்லிம் மக்களின் வாக்குகள் - கட்சிகளுக்கென்றும், வேட்பாளர்களுக்கென்றும் பிரியப் போகின்றன. இப்படி நடந்தால், கடைசியில், குரங்கு அப்பம் பிரித்த கதையில்தான் போய் முடியும்.

உதாரணமாக, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் பெரும்பான்மை ஆதரவினைப் பெற்ற கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. இந்தக் கட்சி இம்முறை, அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து, யானைச் சின்னத்தில் போட்டியிடுகிறது. முஸ்லீம் காங்கிரஸ் சார்பாக யானைச் சின்னத்தில் 03 முஸ்லிம் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்ட முஸ்லிம் வாக்காளர்கள் நினைத்தால், மேற்படி மூன்று வேட்பாளர்களையும் வென்றெடுக்கலாம். சில வேளை, "ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற காய்ச்சலில், வாக்குகள் சிதறுமானால், "அம்போ"தான்!

2000 ஆம் ஆண்டிலும் - அம்பாறை மாவட்டத்தில் இப்படியொரு தேர்தல் கூட்டணி அமைந்தது. மக்கள் முன்னணியுடன் (People's Alliance) இணைந்து, முஸ்லீம் காங்கிரஸ் கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டது. அப்போதும் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் 03 வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர்.

தேர்தலின் இறுதியில் - அம்பாறை மாவட்டத்தில், மக்கள் முன்னணி வெற்றியடைந்து, 04 உறுப்பினர்களைப் பெற்றது. அதில் மூவர் முஸ்லிம்கள், ஒருவர் சிங்களவர். தெரிவான மூவரும் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்களாவர். சில வேளை, மக்கள் முன்னணியில் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள், அப்போது குறைந்தளவான விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தால், முடிவு தலைகீழாக மாறியிருக்கும். முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டிருக்கும்.

அது அவ்வாறிருக்க, நடைபெறவுள்ள தேர்தலில் - அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வாக்குகள் சிதறுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன. எனவே, இந்த நிலைமையினை சரியாகப் புரிந்து கொண்டு, "ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற காய்ச்சலிலிருந்து விடுபட்ட நிலையில் சிந்தித்தால் மட்டுமே, சமூகம் சார்பான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களை உறுதி செய்ய முடியும். ஆனால், இவற்றையெல்லாம் உள்வாங்கும் நிலையில் கணிசமானோர் இல்லை. ஏனெனில், ஒவ்வொரு பிரதேசமும் தத்தமது நலன் சார்ந்து யோசிப்பதையே, இப்போது அரசியலாகக் கொண்டுள்ளன.

**வினை அறுத்தல்**

ஆயினும், "ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற காய்ச்சலை, அம்பாறை மாவட்டத்தில் விதைத்து, பிரதேசவாதத்தினூடாக அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொண்டவர்களின் - அரசியல் அந்திம காலமாகவும், இந்தத் தேர்தல் இருக்கக் கூடும். களநிலைவரம் அப்படித்தான் உள்ளது. இதேவேளை, "ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற கோசத்தை முன்வைத்து, நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தினைத் தக்கவைத்துக் கொண்டு வந்தவர்களின் நிலையும் பரிதாபகரமாகவே உள்ளது. இம்முறை ஊருக்கான எம்.பி.யை இழந்து விடுவோமோ என்கிற எண்ணமே, அவர்களுக்குள் - போதைக்கு அடிமையான ஒருவனின் பதற்றத்தை உருவாக்கிவிட்டுள்ளது.

இன்னொருபுறம், இந்தக் காய்ச்சலானது, கணிசமானோரிடையே - சமூகம் சார்பாகச் சிந்திக்கும் ஆற்றலை மழுங்கடித்துள்ளது. சமூகம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, "ஊருக்கு எம்.பி. வேண்டும்" என்கிற அளவுக்கு, இந்தக் காய்ச்சல், பலரின் மூளைகளைப் பாதித்திருக்கிறது.

அம்பாறை மாவட்டத்துக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களின் எண்ணிக்கை 07 ஆகும். இதேவேளை, இந்த மாவட்டத்தில் முஸ்லிம்கள்தான் பெரும்பான்மையாக உள்ளனர். அந்தவகையில் பார்த்தால், இந்த மாவட்டத்தில் அதிகளவான நாடாளுமன்றப் உறுப்பினர்களை முஸ்லிம்கள்தான் பெற்றுக் கொள்தல் வேண்டும்.

ஆனால், 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், அம்பாறை மாவட்டத்தில் அப்போது 37.5 வீதமாகக் காணப்பட்ட சிங்கள சமூகம், மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்ட அதேவேளை, 44 வீதத்தினைக் கொண்ட முஸ்லிம் சமூகமும், மூன்று பிரதிநிதிகளைத்தான் பெற்றுக் கொண்டது.

இருந்தபோதும், இம்முறை 2010 இல் பெற்றுக் கொண்ட எண்ணிக்கையினையாயினும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் பெற்றுக் கொண்டால், அதுவே ஆறுதலான செய்தியாக இருக்கும். நிலைமை அந்தளவு மோசமாகிக் கிடக்கிறது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் - ஒரு பக்கம் கட்சிகளால் பிரிந்தும், இன்னொரு பக்கம் "ஊருக்குஎம்.பி. வேண்டும்" என்கிற காய்ச்சலால் பாதிக்கப்பட்டும், இப்படியே தொடர்ந்தும் இருப்பார்களாயின், கடைசியில் அவர்களுக்கு ஒரு "தும்பி" கூட கிடைக்கப் போவதில்லை!

-தமிழ் மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை விண்வெளித்துறையில் தலைநிமிர வைத்தவர் அப்துல்கலாம்

## தனது இரங்கல் செய்தியில் பிரதமர் மோடி

(புதுடில்லி)

**விண்வெளித்துறையில் இந்தியாவை தலை நிமிரச் செய்த தலை சிறந்த விஞ்ஞானியை, சிறந்த வழிகாட்டியை இந்தியா இழந்து விட்டது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாமின் மறைவிற்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.**



அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அறிவியல், தொழில்நுட்பத்தில் இந்தியாவை புதிய உச்சத்திற்கு கொண்டு சென்ற அப்துல் கலாமின் மறைவு இந்தியாவிற்கு மிகப் பெரிய இழப்பு.

விண்வெளித்துறையில் இந்தியாவை தலைநிமிர செய்த தலை சிறந்த விஞ்ஞானியை, சிறந்த வழிகாட்டியை இந்தியா இழந்துவிட்டது. நாடு முழுவதுமுள்ள இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் முன்னோடியாக திகழ்ந்த கலாம் தனது இறுதி நேரத்திலும் கூட மாணவர்களுடனேயே இருந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.



விமான நிலையத்தில் அப்துல் கலாமின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட போது...

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர், பாரத ரத்னா டாக்டர். ஆ.ப.ஜே அப்துல்கலாமின் மறைவு எனக்கு நேர்ந்த மிகப்பெரிய இழப்பாகவே கருதுகிறேன். அவருடன் நீண்ட காலம் நான் இருந்திருக்கிறேன்.

ஒரு சிறந்த அறிவியலாளராக, நிர்வாகியாக, கல்வியாளராக, எழுத்தாளராக, விஞ்ஞானியாக அவர் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்கா. அவரது எளிமை அனைவராலும் போற்றப்பட்டது. குழந்தைகள் மீது அதிக அன்பு கொண்டவர்.

அவரது தன்னம்பிக்கை மிக்க பேச்சாலும், உரையாடலாலும் நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு அதிக ஊக்கம் அளித்தவர்.

இந்திய இராணுவ ஆராய்ச்சி மையத்தின் தலைவராக நாட்டின் பாதுகாப்புக்கு அவர் ஆற்றிய சாதனைகள் அளப்பரியது.

ஓய்வின்றி நாட்டுக்காக தொடர்ந்து உழைத்த அவரது சேவைகளை பாராட்டி பல உயரிய விருதுகளால் அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். தாய்நாட்டிற்காக தன்னையே அர்ப்பணித்த அவரது மறைவு இந்தியாவுக்கே மிகப்பெரிய இழப்பு. அப்துல்கலாம் மக்களின் ஜனாதிபதியாக திகழ்ந்தவர். அவரது மறைவிற்கு பிறகும் என்றும் அவரது புகழ் நிலைத்திருக்கும். இவ்வாறு பிரணாப் முகர்ஜி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (3-7)

# அப்துல் கலாமின் மறைவிற்கு பாராளுமன்றம் இரங்கல்

## இரு அவைகளும் ஒத்தி வைப்பு

பாராளுமன்ற இரு அவைகளிலும் நேற்று அப்துல் கலாம் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மக்களவையில் சபாநாயகர் சுமித்ரா மகாஜன் இரங்கல் செய்தியை வாசித்தார். அணு ஆயுதம் மூலம் இந்தியாவுக்கு பெருமை தேடி தந்தவர் என்று அவர் கலாமுக்கு புகழாரம் சூட்டினார்.

மேல் சபையில் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி இரங்கல் செய்தியை வாசித்தார். கலாமின் தலைமை, பழகும் விதம் என்றென்றும் போற்றத்தக்கது என்று அன்சாரி கூறினார். பிறகு இரு அவைகளிலும் எம்.பி.க்கள் எழுந்து நின்று 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

இதையடுத்து பாராளுமன்ற இரு சபைகளும் அப்துல் கலாமுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நேற்றும் இன்றும் ஒத்தி வைக்கப்பட்டன. (3-7)

# அப்துல்கலாமின் உடலை சொந்த ஊரில் அடக்கம் செய்க

### குடும்பத்தினர் கோரிக்கை

மறைந்த மாமேதை மேதகு டாக்டர். அப்துல் கலாமின் உடல் நேற்று அதிகாலை 5.15 மணிக்கு சிம்லாவின் மேகாலயா மாநிலத்தின் ஷில்லாங்கிலிருந்து கவுகாத்தி கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து தலைநகர் டில்லி கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அங்கு அவருக்கு 2 நாட்கள் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. முதல் நாள் அரசியல் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும், 2ஆம் நாள் பொதுமக்களும், மாணவர்களும், அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அப்துல் கலாமின் உடல் அவரது சொந்த ஊரில் தான் அடக்கம் செய்யப்பட வேண்டும் என அவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-7)

# யாகூப் மேமனுக்கு நாளை தூக்கு

மும்பை தொடர் குண்டு வெடிப்பு குற்றவாளி யாகூப் மேமன் நாளை 30 ஆம் திகதி நாக்பூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு மூளையாக செயற்பட்ட அவருடைய சகோதரர் டைகர் மேமன் தொடர்ந்து தலைமறைவாக உள்ளார்.

இந்நிலையில், தூக்கு கயிற்றை எதிர்நோக்கி இருக்கும் யாகூப் மேமனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஹிந்தி நடிகர் சல்மான் கான் டுவிட்டரில் கருத்து தெரிவித்திருந்தார்.

அதில், அவருடைய சகோதரர் (டைகர் மேமன்) செய்த தவறுக்காக அப்பாவி யாகூப் மேமன் தூக்கு மேடை ஏறுகிறார். அவரை விட்டு விட்டு, தப்பியோடிய டைகர் மேமனை தூக்கிலிடுங்கள்.

இந்த விவகாரம் பற்றி 3 நாட்கள் கருத்து தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால், பயமாக இருக்கிறது. இது ஒருவரது குடும்பம் சார்ந்த விவகாரம்.

ஒரு அப்பாவியை கொல்வது, ஒட்டுமொத்த மனிதாபிமானத்தையே கொல்வதற்கு சமமானது. டைகர் மேமன் பாகிஸ்தானில் பதுங்கி இருந்தால், அவரை அந்நாட்டு பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

257 பேரை பலிகொண்ட மும்பை தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு நிதியுதவி அளித்ததாக மரண தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் யாகூப் மேமனை, சல்மான் கான் 'அப்பாவி' என்று கூறியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

யாகூப் மேமன் பற்றிய சல்மான் கானின் கருத்து பா.ஜ.க. மற்றும் சிவ சேனா உள்ளிட்ட அரசியல் கட்சிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக சல்மான்கானுக்கு அவர்கள் கடும் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், யாகூப்மேமனுக்கு ஆதரவாக சல்மான்கான் கருத்து கூறியதற்கு அவரது தந்தையும், நடிகருமான சலீம்கானும் எதிர்ப்பு தெரிவித்தார்.

மேலும், சல்மான்கானின் கருத்தை தீவிரமாக கருத வேண்டாம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதைத்தொடர்ந்து, யாகூப் மேமன்பற்றிய தன்னுடைய கருத்தை திரும்ப பெற்றுக் கொண்ட சல்மான் கான், இதற்காக பகிரங்க மன்னிப்பும் கோரி உள்ளார்.

மேலும், யாகூப் மேமனை தான் 'அப்பாவி' என கூறவில்லை என்றும், நாட்டின் நீதித்துறை மீது தனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது என்றும் சல்மான்கான் டுவிட்டரில் மற்றொரு பதிவை வெளியிட்டுள்ளார்.

அதில், என்னுடைய டுவிட்டர் பதிவுகள் மதங்களுக்கு எதிரானது என்று கருதுபவர்களை வன்மையாக கண்டிக்கிறேன். அனைத்து மத நம்பிக்கைகளையும் நான் மதிக்கிறேன் என்றும் குறிப்பிட்டு உள்ளார். (3-7)

# இராணுவ உடையில் தீவிரவாதிகள் தாக்குதலில் ஒன்பது பேர் உயிரிழப்பு

பஞ்சாப் மாநிலத்தில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர்.

தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் பஞ்சாப் மாநில சிறப்பு படை இறங்கி உள்ளது.

பஞ்சாப் மாநிலம் குர்தாஸ்பூரில் காரில் சென்ற தீவிரவாதிகள் பேருந்து மீது துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

அமிர்தசரஸ் - பதான்கோட் நெடுஞ்சாலையில் சென்ற பயணிகள் பேருந்து மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் பயணி ஒருவர் பலியாகினார். மேலும் 4 பயணிகள் காயம் அடைந்தனர்.

பேருந்து மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள், தினாநகர் பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர். பொலிஸாரும் பதிலுக்கு தாக்குதல் நடத்தி உள்ளனர். தீவிரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீதும் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

தீவிரவாதிகள் இந்திய இராணுவ வீரர்களின் உடையை போன்ற உடையை அணிந்து வந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் தொடர்பாக தகவல் அறிந்ததும், கூடுதல் பொலிஸார் அங்கு சென்று தீவிரவாதிகளுக்கு எதிரான ஆப்ரேஷனை தொடங்கினர்.

தொடர்ந்து இருதரப்பு இடையே சண்டை நடைபெற்றது. இந்தத் தாக்குதல்களில் மொத்தமாக 9பேர் உயிரிழந்துள்ளனர். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அபகீர்த்தி என்று நினைத்தால் சட்டக்கடிதம் அனுப்ப உரிமையுள்ளது

## சுனில் பெரேரா

(கொழும்பு)


தமக்கெதிரான அபகீர்த்தி குற்றச்சாட்டுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சுமார் 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி சட்டக்கடிதங்களை, ஐந்து பேருக்கு அனுப்பியுள்ளமை குறித்து கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தவகையில் சட்டக்கடிதம் அனுப்பப்பட்டவர்களில் ஒருவரான ஜிப்சிஸ் இசைக் குழுவின் தலைவர் சுனில் பெரேரா தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நாட்டில் ஒவ்வொருவருக்கும் தமது கருத்துக்களை வெளியிட உரிமையுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது அந்த உரிமை இருக்கவில்லை. எனினும் இன்று அந்த உரிமை இருக்கிறது. இந்த நிலையில் அந்தக்கருத்துக்கள் தமக்கு அபகீர்த்தியை உண்டாக்குகின்றன என்று மகிந்த ராஜபக்ஷ நினைத்தால், அதற்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள அவருக்கு உரிமையுள்ளது என்று தெரிவித்தார்.

குருநாகல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தமது கருத்தில், மகிந்த ராஜபக்ஷவின் ஊழல்கள் தொடர்பில் சாட்சியங்கள் உள்ளன. அதனடிப்படையிலேயே அவர் மீது குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன. எனினும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்களின் வாய்களை மூடிவிடும் நோக்கிலேயே மகிந்தவின் சட்டக்கடிதம் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (இ-7)




# அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகிறது

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

**நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வெளியிடப்பட்ட விஞ்ஞாபனத்தின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரங்கள் பகிரக்கப்பட வேண்டும் என்றே கோருகின்றது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனி நாட்டு கோரிக்கையை முன்வைக்கவில்லை, அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென்றே கோருகின்றது.

அரசியல் அமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தற்போதே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்த அதிகாரப் பகிர்ந்தளிப்பு போதுமானது அல்ல எனவும் அதனைத் தாண்டிய வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததுடன், அது குறித்து இந்தியாவிற்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

தேர்தல் காலத்தில் பல்வேறு கட்சிகளும் தங்களது இன சமூகங்களை திருப்திப்படுத்த சில வாக்குறுதிகளை அளிப்பது வழமையானதாகும்.

1948ஆம் ஆண்டு முதல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இனவாத, மதவாதத்தை தூண்டி நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லக் கூடாது.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் உள்ளிட்ட அனைத்து இன சமூக மக்களும் மகிழ்ச்சியாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டம் வழங்குவதாக வாக்குறுதி அளித்த மகிந்த ராஜபக்ஷவும் அவரது ஆதரவாளர்களும் இன்று பல்வேறு வழிகளில் இனவாதத்தை தூண்டும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

# ஐ.தே.கவில் ரணில் தனித்தே தீர்மானங்களை எடுக்கிறார்

## அனுர பிரியதர்சன தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியில், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனித்து தீர்மானங்களை எடுத்து வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

பல இலட்சக்கணக்கான அடிமட்ட கட்சி உறுப்பினர்கள் அம்பாந்தோட்டை மெதமுலனவிற்கு சென்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அரசியலுக்கு வருமாறு கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கை கட்சியிலும் முன்வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேயே எமது மத்திய செயற்குழு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்பன கீழ் மட்ட உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்கும் பொறிமுறைமை ஒன்றை பின்பற்றி வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியில் அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியில் அடிமட்ட அல்லது கீழ் நிலை உறுப்பினர்களின் யோசனைகள் மத்திய செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுகள் மட்டுமே மத்திய செயற்குழுவினால் அமுல்படுத்தப்படுகின்றது என அனுர பிரியதர்சன யாப்பா செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரச தரப்பினர் போதைப்பொருளை மட்டும் பெரும் பிரச்சினையாகக் கருதுகின்றனர்

## அதிருப்தி வெளியிடுகிறார் பவித்திரா

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் எதனோல் மற்றும் போதைப் பொருள்கள் மாத்திரமே நாட்டின் பிரதான பிரச்சினையாக கருதுகின்றதென முன்னாள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

பல்மடுல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்முறை பொது தேர்தலில் பொதுமக்களின் தொடர் கோரிக்கைகள் மகிந்த ராஜபக்ஷவிடம் கிடைத்தன. அதனால் தான் மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எங்களுக்காக இருக்கின்றார்கள் என்று நம்பிக்கையில் இருந்தோம்.

எனினும் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேவையற்ற முட்டாள்தனமான உரையை ஆற்றினார். இது எங்கள் பயணத்தை இடை நிறுத்த போடப்பட்ட குண்டு.

இதன் மூலம் ஐக்கிய தேசிய கட்சிக்கு அனுகூலமான நிலை உருவாகியது. எனினும் இந்நாட்டு மக்களிடம் நான் கூறவேண்டியது ஒன்றுதான் ஏமாற வேண்டாமென்று.



இம்முறை முழு நாட்டிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி பெரிய அளவிலான வெற்றியை பெற்றுக்கொள்ளும்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நாடாளுமன்றத்திற்கு செல்லும் 11 பேரில் 7 பேர் கூட்டணியில் இருந்து செல்வதற்கு பெரிய வெற்றியினை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2015 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையிலும் உறுப்பினர்களுக்கு ஒரு சதம் பணம்கூட வழங்கவில்லை. 100 இலட்சம் வழங்குவதாக கூறியது மாத்திரமே.

அதனால் அபிவிருத்திகள் தடைப்பட்டுள்ளன. மகிந்தவுக்கு போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்க மாட்டேன் என ஜனாதிபதி கூறியிருந்தார்.


இது எங்களுக்கு பிரச்சினையாகியது. ஐக்கிய தேசிய கட்சியின் அழுத்தங்களினாலே இவ்வாறு நடந்தன.

பின்னர் விருப்பமின்றி மகிந்தவுக்கு வேட்புமனு வழங்கியதாக கூறி ஜனாதிபதி இன்னும் ஒரு குண்டு போட்டார்.

எனினும் நாங்கள் இணைந்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியே மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு பெற்றுக்கொடுத்தோம்.

மகிந்தவினால் வெற்றி பெற முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவசியமற்ற உரையை ஆற்றினார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தில் பழைய மாவட்டச் செயலகத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த கட்டடத்தொகுதியில் சதொச விற்பனை நிலையம் நேற்று பிற்பகல் 3மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டபோது.... (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# இரண்டாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் நாளை மூடப்படும்

## கல்வி நடவடிக்கைக்காக மீண்டும் ஓகஸ்ட் 31ல் திறக்கப்படும்

(மல்லாவி)

அரசாங்க பாடசாலைகள் அனைத்தும் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை இரண்டாம் தவணை விடுமுறைக்காக மூடப்படுமென கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சிங்கள,தமிழ்,முஸ்லிம் ஆகிய அரச பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக நாளை வியாழக்கிழமை 30ஆம் திகதியுடன் மூடப்பட்டு மீண்டும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமை மூன்றாம் தவணைக்காக திறக்கப்படும்.


இதேவேளை இவ்விடுமுறைக்காலத்தில் க.பொ.த.(உ/த) பரீட்சை நடைபெற ஏற்பாடாகி இருந்த நிலையில் தற்போது அரசாங்கத்தினால் 8ஆவது பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவித்திருந்த நிலையில் பாடசாலை விடுமுறை காலத்திலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நாடுதழுவிய ரீதியில் க.பொ.த.(உ/த) பரீட்சை நடைபெறவுள்ள 939பாடசாலைகள் மட்டும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி புதன்கிழமை மூன்றாம் தவணைக்காக மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

க.பொ.த.(உ/த) பரீட்சை நடைபெறாத பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமை மூன்றாம் தவணைக்காக, ஆரம்பமாகவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நடைபெறவுள்ள க.பொ.த.(உ/த) பரீட்சையானது முதற்கட்டமாக ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை வரையிலும் இரண்டாம் கட்டமாக ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி திங்கட்கிழமை முதல் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரை இரு பிரிவுகளாக நடத்துவதற்கு பரீட்சை திணைக்களம் ஒழுங்குபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# வீதி அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல்



வடக்குவீதிஅபிவிருத்திஅமைச்சர்பா.டெனீஸ்வரன் வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வவுனியா,மன்னார் பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதனை சந்தித்து வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி பணிகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்,வடக்கு கிராம அபிவிருத்தி பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-9)

# மோ. சைக்கிளில் பயணித்தவர் மாட்டுடன் மோதுண்டு படுகாயம்

(மல்லாவி)

ஒலுமடுவில் இருந்து தச்சடம்பன் கிராமத்திற்கு மோட்டார் சைக்கிளில் வேகமாக பயணித்த குடும்பஸ்தர் பசுமாட்டுடன் மோதுண்டு விழுந்ததில் படுகாயம் அடைந்த நிலையில் கிராம மக்களால் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு செல்லும் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கற்கிடங்கு புதிய நகர் மாங்குளம். எனும் இடத்தைச் சேர்ந்த இராமநாதன் வசந்தகுமார் (வயது -24) என்ற குடும்பஸ்தரே முகத்திலும் ஏனைய இடங்களிலும் படுகாயம் அடைந்த நிலையில் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

தனது மகனின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு விட்டு மேற்படி வீதியூடாக பயணித்த வேளை இவ் விபத்து நேர்ந்துள்ளது. (2-15)




# கணிதபாட ஆசிரியர்களுக்கான கணிதபாட தரவட்டச் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் -6 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்களில் கணித பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமான "கணிதபாடதரவட்டச்செயலமர்வு" நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இச் செயலமர்வில் மேற்படி தரங்களில் கணித பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் செயலமர்விற்கு வருகை தரும் போது தரம் -6 தொடக்கம் தரம் -11 வரையிலான இரண்டாம் தவணைக்குரிய கணித பாடப்புள்ளிப் பகுப்பாய்வு, தரம் -11 மாணவர்களில் கேத்திர கணிதம் கற்க விரும்பும் மாணவர்களின் விபரம், பாடசாலை விடுமுறை நாட்களில் கணித பாட வகுப்புக்கள் நடைபெறும் நேர அட்டவணை (அதிபர் கையொப்பத்துடன்) என்பனவற்றை தம்முடன் தவறாது எடுத்துவர வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (2-15)

# பனம்பொருள் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி

(பளை)

யு.என்.டி.பி அமைப்பின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பனம் பொருள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கி மையும் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம், முல்லையடி, பளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி. ஜெயராணி பரமோதயன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபை தலைவர் கோகுலநாதன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ஞானேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர் மா.மகாதேவன், விரிவாக்க முகாமையாளர் சோ.கோபாலகிருஸ்ணன், பனை அபிவிருத்தி சபை இணைப்பாளர் வி.தர்மகுலசிங்கம், முல்லையடி கிராம உத்தியோகத்தர் வே.கண்ணப்பமூர்த்தி, தர்மக்கேணி கிராம உத்தியோகத்தர் க.தனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணி வி.கழக உதைபந்தாட்ட தொடர்

## இறுதிப் போட்டியில் பொம்மர்ஸ்



தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் யாழ். மாவட்ட ரீதியான 9 நபர் கொண்ட உதைப்பந்தாட்ட சுற்றுத்தொடரின் லீக் போட்டியின் வரிசையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி அரையிறுதி ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதிநேர முடிவு வரை இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறாது தமது பலத்தை சமமாக நிலை நிறுத்திக்கொண்டன.

ஆனாலும் பிற்பாதி ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் ஒரு கோலினை தனது அணிக்கு பெற்றுக் கொடுத்து ஆட்டத்தை முடிவு செய்ததன் மூலம், பொம்மர்ஸ் சுற்றுத் தொடரின் இறுதிக்கு தெரிவாகியுள்ளது.



இப் போட்டியின் ஆட்ட நாயகனாக பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார்.

இதுவரை நடைபெற்று வந்த இந்த சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் வடமராட்சியின் முன்னணி அணிகளான கம்பர்மலை யங்கம்பன்ஸ் மற்றும் வதிரி பொம்மர்ஸ்அணிகள்மோதவுள்ளன. (க)

## இறுதிப்போட்டியில் கலைஒளி



பருத்தித்துறை நாவலர் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 6 பேர்களை கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிக்கு தகுதியானது இணுவில் கலைஒளி.

கடந்த சனிக்கிழமை நாவலர் மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றன.

இச் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப்போட்டியில் இணுவில் கலைஒளி வீரர்களான சதீசன் மற்றும் மோகன்றாஜ்ஜின் சிறந்த துடுப்பாட்டத்துடனும் தீபநாதனின் அபார பந்து வீச்சின் மூலமும் (hat - trick அடங்கலாக ஒரு ஓட்டங்களுக்கு 4 இலக்குகள்) கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகத்தை இலகுவாக வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

## தேசிய மட்ட கராத்தேக்கு காந்தி இல்ல மாணவன் தகுதி




கிளி/ உருத்திரபுரம் காந்தி சிறுவர் இல்ல மாணவனாகிய அ.நிறோசன் 15 வயதுப்பிரிவு குமித்தே போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.




இவர் இல்லத் தலைவர் இராசநாயகம் (முன்னாள் கிளி. மாவட்ட அரச அதிபர்) கௌரவிக்கப்பட்டார்.

இவர்களுடன் இல்ல நிர்வாக செயலர் எஸ்.சதானந்தன், இல்ல முகாமையாளர் எம்.மோகனதாஸ், பயிற்சி ஆசிரியர் சென்சே. எஸ்.விஜயராஜ் ஆகியோரைப் படத்தில் காணலாம். (க)

## இன்றைய போட்டிகள்

யாழ். உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான காற்பந்து போட்டியில் இன்று புதன் கிழமை மாலை 3.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## முகாமைத்துவ வணிக பீடம் சம்பியன்





யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அனைத்து பீட புதுமுக மாணவர்களிடையே கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களில் பல்கலைக் கழக மைதானத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுநிகழ்வுகளில் முகாமைத்துவ வணிக பீடம் முதலாம் இடத்தையும் கலைப்பீடம் இரண்டாம் இடத்தையும் விஞ்ஞானபீடம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. இதில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 8 பீடங்களான முகாமைத்துவ வணிகபீடம், கலைப் பீடம், விஞ்ஞானபீடம், மருத்துவ பீடம், விவசாயபீடம், பொறியியல் பீடம் ஆகியவற்றுடன் வவுனியா வளாகத்தின் இரண்டு பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் மிகுந்த போட்டியுடன் கலந்து கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.
-திருக்குறள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# டாக்டர் அப்துல் கலாம்... கலங்கிய கண்களோடு...

இந்தியக் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தி நெக்குருகச் செய்து விட்டது.

இந்திய தேசத்தின் முன்னாள் குடியரசுத் தலைவர்-இந்தியாவின் மிக உன்னதமான விஞ்ஞானி என்ற எல்லைகளுக்கு அப்பால் மிகச் சிறந்த மெய்ஞ்ஞானியாகவும் டாக்டர் அப்துல் கலாம் வாழ்ந்தார்.

உலக மக்களின் நல்வாழ்வுக்காக-இளைஞர்களை வழிப்படுத்துவதற்காக, இறைவனால் அனுப்பப்பட்ட ஒரு மகான் அப்துல் கலாம் என்றால் அதில் எந்த மிகைப்படுத்தலும் இருக்க முடியாது.

இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியை கோட்சே என்பவன் சுட்டுக் கொன்றபோது, சீன அறிஞர் ஒருவர் கூறினார். "மகாத்மா காந்தி என்றொரு மனிதர் இந்த உலகில் வாழ்ந்திருக்க முடியாது என்று எதிர்காலச் சந்ததி சொல்லும்"

சீன அறிஞரின் இந்த உன்னதமான கருத்து எவ்வளவு நிதர்சனமானது. அண்ணல் காந்தி, சுவாமி விவேகானந்தர், ரமண ரிஷி போன்ற மகான்களின் வாழ்வியல் முறைகளை இன்றைய கால மனித சமூகத்தால் நம்ப முடியாது. இது போலத்தான் இனி வருகின்ற மனித சமூகம், டாக்டர் அப்துல் கலாம் என்ற மனிதரை ஒரு கற்பனைப் பாத்திரமாகவே பார்க்கும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

இந்திய தேசத்தின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் அப்துல் கலாம் தனது பதவியின் முடிவில் குடியரசுத் தலைமையகத்தை விட்டு வெளியேறுகிறார். அதன்போது அவர் கூறியது,

"நான் இந்த மாளிகையை விட்டு வெளியேறும் போது என்னுடன் இரண்டு சூட்கேசுகளை மட்டுமே எடுத்து செல்கிறேன். இவற்றுக்குள் அறிவியல் புத்தகங்களே உள்ளன. நேற்றைய தினம் எனது நண்பர் ஒருவர் தங்கத்தினாலான பேனா ஒன்றை என்னிடம் கொண்டு வந்து தந்தார். நான் அதை வாங்க மறுத்து விட்டேன். இதனால் இருவருக்கும் கவலை.

என்ன செய்வது! இந்து தர்மத்தில் உள்ள மனுஸ்மிருதி என்ற வேதம் சொல்கிறது. அன்பளிப்புகளை வாங்குவதனால் ஒருவரின் தெய்வீகத் தன்மை குறையும் என்று. மனுஸ்மிருதி வேதத்தின் படியே தங்கத்தாலான அந்தப் பேனாவை நான் வாங்கவில்லை" என்றார்.

ஒரு முஸ்லிம் மதம் சார்ந்தவர், இந்து தர்மத்தில் உள்ள மனுஸ்மிருதி வேதத்தை கற்று அதன்படி வாழ்ந்தார். மற்றவர்களையும் வாழத்தூண்டினார் என்றால் நிச்சயமாக டாக்டர் அப்துல் கலாம் ஒரு தெய்வப் பிறவி என்றே கூறவேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தனது விருப்பம் டாக்டர் அப்துல் கலாமைச் சந்திக்க வேண்டும் என்று கூறிய போது, அப்துல் கலாமின் புகழ் இந்த உலகின் உச்சத்தைத் தொட்டது. ஒரு பெரும் அறிவுக் கடல், அமைதியாக, எளிமையாக, தெய்வீகத் தன்மையோடு நடமாடி இந்த உலகை விட்டுப் பிரிந்து போயிற்று.

இன்னும் பல ஆண்டுகள் அவர் வாழவேண்டும் என நினைத்திருந்த வேளை அவரின் திடீர் மறைவு தாளாவேதனைக் குரியது.

டாக்டர் அப்துல் கலாம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அவரோடு யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சந்தித்தனர்; கதைத்தனர். அந்த ஞாபகத்தை நினைக்கும்போது கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொள்கின்றன.

ஒரு பெரும் விஞ்ஞானியாக, ஒரு பெரும் ஆத்மஞானியாக, மெய்ஞ்ஞானியாக வாழ்ந்து வழிகாட்டினார் என்பதற்குள் இன்றைய உலகம் யாருடைய கருத்தை ஏற்கும் என்பதை உணர்ந்த இறைவன் டாக்டர் அப்துல் கலாமை அனுப்பி வைத்தார். விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் ஒன்றாக இணைந்தால் தான் மனிதவாழ்வு புனிதமடையும் என்பதை டாக்டர் அப்துல்கலாம் ஊடாக இறைவன் இந்த உலகுக்கு உணர்த்தினார் என்பதே உண்மை.

என்றும் வழிபாட்டுக்குரிய இராமேஸ்வரம் தந்த டாக்டர் அப்துல் கலாம் முஸ்லிமாகவும் இந்துவாகவும் வாழ்ந்ததற்குள் பாரததேசத்தின் சமய சமரசம் உலகிற்கான உதாரணமாயிற்று. டாக்டர் அப்துல் கலாமின் புனித ஆத்மாவின் ஆசி என்றும் எங்களுக்குக் கிடைக்கும்.

# தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

மத்திய சுகாதார அமைச்சினால் பொதுச் சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக்காக பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், விஞ்ஞானம், கணிதம் மற்றுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம் உட்பட இரு அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் 2010, 2011, 2012, 2013, 2014 ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், இரசாயனவியல், விவசாயம் ஆகிய இரண்டில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் பணிப்பாளர் (நிர்வாகம்)-2, சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியசாலை அமைச்சு, சுவசிரிபாய இல. 385, வண.பத்தேகம, விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை கடந்த 3 ஆம் திகதி வெளியான வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம்.(3-7)

# நிர்வாகத் தெரிவு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க நிர்வாகத் தெரிவு பிற்போடப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி உ.யசோதா அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் ஓகஸ்ட் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஓகஸ்ட் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதற்கான நியமனப் பத்திர அறிவித்தல் கடிதம் நிர்வாக அங்கத்தவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய வேட்பாளர் நியமனப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி ஓகஸ்ட் 5 ஆம் திகதி எனவும் இத்திகதிக்கு முன்னர் வேட்பாளர் நியமனப் பத்திரங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே நியமனப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் மீளவும் நியமனப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதனை கருத்திற் கொண்டதுடன் மேலதிக தகவல்கள் அறிய விரும்பின் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சமூக விஞ்ஞான படிப்பு வட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நவகொலனித்துவமும் பாராளுமன்ற முறைமையும் எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இந்நிகழ்வின் தொடக்கவுரையினை ச.தனுஜனும் கருத்துரையினை சி.கா. செந்திவேலும் நிகழ்த்தவுள்ளனர். இக் கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

சமூக,விஞ்ஞான,அறிவியல் கலை இலக்கிய ஆர்வலர்களை இதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (இ-3)

# விடுதித்தினவிழா இன்று

(யாழ்ப்பாணம் )

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் விடுதித்தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வு பெற்ற தபாலதிபரும் பாடசாலையின் பழைய மாணவனுமாகிய அப்புத்துரை பாலச்சந்திரன், ஓய்வுபெற்ற லிகிதரும் பழைய மாணவியுமான திருமதி ஜோர்ஜ் யோகராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை வன்முறையற்றதாகவும் நேர்மையானதாகவும் நடத்துவதற்கு சகல அரசியற் கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் ஒத்துழைப்பு வழங்கவும் தகுதியான வேட்பாளர்களைத் தெரிவு செய்ய மக்களைக் கோருவதெனவும் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற மக்கள் அமைப்புக்களின் ஒன்றிய நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மக்கள் அமைப்புக்களின் ஒன்றிய இணைப்பாளர் ஜே. தற்பரன் அறிவித்துள்ளார். (இ-3)

# திருமுறை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் திருமுறைப் பெருவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் யாழ். இந்து சமயப் பேரவை ஸ்ரீநடராஜப் பெருமான் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு நடைபெறவுள்ள ஆலய பூசையைத் தொடர்ந்து தேவாரத் திரட்டு முற்றோதல் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை நடத்திய பண்ணிசைப் போட்டியில் முதலாம் இடம்பெற்று தங்கப் பதக்கம் பெற்ற நிரோசினி சிவசுப்ரமணியம் கௌரவிக்கப்படவுள்ளார். (இ-5)

# பொன்விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்தி சங்க பாலர் பாடசாலை ஆசிரியை லீலாவதி மாரிமுத்துவின் பொன்விழா நிகழ்வு எதிர்வரும் ஆவணி மாதம் முதலாம் திகதி முற்பகல் 9 மணிக்கு சித்தன்கேனி மகாகணபதி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன. முகாமைத்துவக் குழுத் தலைவர் ஸ்ரீ.ஸ்ரீமதி உமாபதி சர்மா வாசுகி தம்பதிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் பூலோகசிங்கம் சிவனேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது ஆசிகளை சித்தன் கேணி சிவன் தேவஸ்தான பழைய மாணவர் சபா.வாசுதேவக்குருக்கள் வழங்குவதுடன் தொடர்ந்து சிவஸ்ரீ. ச. மதுசூதனக்குருக்கள். பிரம்மஸ்ரீ. நா. கமலநாதசர்மா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன். யாழ். கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன். வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி. ஐங்கரன் முன்பள்ளி இணைப்பாளர் நா.நிரஞ்சனா. சித்தன் கேணி பாலர் பாடசாலை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் அஜிதா சிவகரன். முன்பள்ளி ஆசியர் சங்கத்தின் தலைவர் யுகந்தினி லோகேஸ்வரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## சூரியன் எழும் முன் நீ எழு



✦ நான் பெரிய பணக்காரன் என்று ஒரு போதும் பெருமை பேசாதே. நட்சத்திரங்களின் பிரகாசத்தின் முன், மின்மினிப்பூச்சியின் கர்வம் காணாமல் போய் விடும். இயற்கையின் பேராற்றலின் முன், நம்முடைய செல்வமும் செல்வாக்கும் மிக அற்பமானவை.

✦ நீ இறைவனைத் தேட விரும்பினால், முதலில் மனிதனைத் தேடு. தெய்வீகசக்தி மற்ற எல்லா பொருளைக் காட்டிலும் மனிதனிடமே விசேஷமாக இருக்கிறது.

✦ சூரிய உதயத்திற்கு முன் எழுந்து, அன்றாடப் பணிகளைத் தொடங்குபவன் வாழ்வில் வெற்றி பெறுவது போல, சிறுவயதில் இருந்தே ஆன்மிக நாட்டத்தை வளர்த்துக் கொள்பவன் இறைவனை அடைவது உறுதி.

✦ உலக ஆசைகளின் நடுவில் இருந்து கொண்டே மனதைக் கட்டுப்படுத்த பழகியவனே உண்மையில் வீரன்.

✦ மனத்தூய்மை பெற்றவனின் வாய் வார்த்தைகள் மந்திரம் போல காந்தசக்தி பெற்றுவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்

## அரசாங்கத்தினை பாதுகாப்பதுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பணி

### கஜேந்திரன் குற்றச்சாட்டு

**சர்வதேச ரீதியான நெருக்கடியில் இருந்து இலங்கை அரசாங்கத்தினை முழுமையாக பாதுகாக்கும் வகையிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டு வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளருமான எஸ்.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**



மட்டக்களப்பில் கோவிந்தன் வீதியில் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் அலுவலகத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், கிழக்கு மாகாணத்தில் இன்னும் சிறிது காலத்தில் தமிழர்கள குரலற்றவர்களாக மாற்றப்படுவார்கள்.எமது உரிமைகள் அங்கீகரிக்கப்படாவிட்டால் இந்த நிலை இன்னும் சில காலத்தில் வடக்கிலும் உருவாக்கப்படும் என்று கூட்டமைப்பினரே கூறிவருகின்றனர், இராணுவத்தில் ,18 பிரிவுகளில் 16 பிரிவுகள் வடக்கில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. குறித்த ஆயுதப்படைகளின் உறவினர்களின் பதிவுகளை வடக்கிலே செய்யுமாறு சிங்கள அரசாங்கம் கூறுமானால் அதனை யாரும் தடுக்க முடியாத நிலையே ஏற்படும். அதனால் சனத் தொகையில் சடுதியான மாற்றம் ஏற்படும். அதன் ஊடாக சிங்கள மயமாக்கல் நடத்தப்படும். இதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பனை வழங்கிக கொண்டேயுள்ளது.

2016ஆம் ஆண்டிலே இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்போவதாக சம்பந்தன் ஐயா கூறியிருக்கின்றார். அவருடைய முடிவு என்பது தமிழர்களுக்கு சாவுமணியாகும். தமிழ்த்தேசியவாதம் என்ற எல்லா நிலைப்பாடுகளையும் கைவிட்டு சிங்களத்திற்குள் இரண்டறக் கலப்பதே அவருடைய நிலைப்பாடாகும. கிழக்கை அப்படிச் செய்து விட்டார். தமிழ்த் தேசிய வாதத்தை மக்களுக்கு முன்னால் தேர்தல் மேடைகளில் பேசி விட்டு இன்று அதிகாரமில லாத கிழக்கு மாகாணசபைக்குள் தன்னுடைய உறுப்பினர்களை அரசுடன் சேர்த்து பங்காளிகளாகி விட்டதன் மூலம் தமிழர்களுக்கு இங்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கின்றது. அதைப்பற்றி பேசுவதற்கு தமிழ் வேட்பாளர்கள் யாரும் தயாராக இல்லை. வடக்கிலும் அவ்வாறானதொரு காரியத்தை செய்து விட்டால் அவருடைய ஆத்மா நிம்மதியடையும். அதுவே அவர் தமிழ் மக்களுக்காக வைத்திருக்கின்ற தீர்வாகும்.

2012ஆம் ஆண்டிலே ஐ.நா.சபையில் இலங்கை தொடர்பாக தீர்மானமொன்று வெளியிடப்பட்டது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என்பதே அதுவாகும். போர் செய்த மகிந்த ராஜபக்ஷ அரசு சர்வதேச நெருக்கடிகளிலிருந்து தப்பிக் கொள்வதற்காக கண்துடைபபிற்கு நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்கியது. அதற்கு அவரே நிபுணர்களையும் நியமித்தார். அவர்களை அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி பாதிக்கப் பட்டவர்களிடமிருந்து வாக்கு மூலங்களை பெற்றார்கள். அதன் பின் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையென்பது தமிழர்களுக்கு ஒரு தீர்வினை தராது என்பது சாதாரண மக்களுக்குக் கூட தெரியும். ஏனென்றால் இன அழிப்பினை செய்தது மகிந்த ராஜபக்ஷ அரசாகும்.

அந்த அரசே தான்செயத குற்றங்களையெல்லாம் ஆராய்ந்து தமிழர்களுக்கு ஒரு தீர்வினை கொடுக்கப போகின்றது என்பதை நாங்கள் நம்பினால் நாங்கள் படு முட்டாள்கள் ஆவோம்.

அந்த நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக சர்வதேச அமைப்புகள் கடும் விமர்சனத்தை முன் வைத்திருந்தன என்றார். (இ)

## ஐ.தே.க.அரசாங்கம் மலர்வதற்கு அனைவரும் சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியம்

### விஜயகலா வலியுறுத்தல்



கிளிநொச்சி, வட்டக்கச்சிப்பகுதியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு திருமதி விஜயகலா மகேஸ்வரன மேலும் தெரிவிக்கையில்,

குடாநாட்டு மக்கள் உட்பட தமிழ்மக்கள் யுத்த வடுக்களிலிருந்து இன்னமும் மீள வில்லை. மக்களின் காணிகள் இன்னமும் முழுமையாக மீள வழங்கப்படவிலலை. யுத்தத்தில் இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் முழுமையாக மீளக்குடியமர்த்தப்பட வில்லை. காணாமற போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விவகாரம், விதவைகள் ஆக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகள், உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கும் இன்னமும் தீர்வு காணப்பட வில்லை.

ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் உருவான எமது அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை எடுத்திருந்தது. வலிகாமம் வடக்கு, மற்றும் சம்பூர் பகுதிகளில் குறிப்பிட்டளவான காணிகளை மீளக் கையளிக்க நடவடிக்கை எடுககப்பட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி கூட இன்னமும் முழுமையாக கைகூட வில்லை. இந்த நிலையில் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தலில் நீங்கள் எமக்கு ஆதரவு அளித்து ஐக்கிய தேசியக்கட்சி யின் ஆட்சியை மீளவும் நிறுவுவதற்கு முன்வர வேணடும். இதன்மூலமே எமது பிரச்சினைகளை படிப்படியாக தீர்த்துக்கொள்ள முடியும்.

இன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மீண்டும் பிரதமராவதற்கு துடித்துக் கொண்டிருக்கின்றார். அவரது தலைமையில் ஆட்சி அமையுமானால் என்ன நடக்கும்என்பதைஉங்களுக்குநான சொல்லத் தேவையிலலை.

மீண்டும் வெள்ளைவன் யுகம் வராது தடுப்ப தற்கு ஐக்கிய தேசியக்கட்சி யின் ஆட்சி மலர வேண்டியது அவசியமாகும். இனியும் நாம் தவறிழைத்தால் பெரும் படுகுழிக்குள் நாம் விழ வேண்டிய நிலை ஏற்படும் .

எனவே எமக்கு முழுமையான ஆதரவைத் தந்த எமது பிரதிநிதித்துவத்தை நீங்கள் அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் நாம் பங்காளாகி எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் கடந்த தேர்தல்களில் விட்ட தவறுகளை இம் முறை நாம் வ ி ட க ... கூடாது. நாம ... சிந் தித் து ... செயற்படவேண் ... நேரம் இது ... வாகுமனமேலும் தெரிவிததார். (இ-7)


இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான உறவுகளை பலிகொடுத்து விட்டு இன்றும் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது எமது மக்கள் துன்ப படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகளை முன்னைய அரசாங்கம் வழங்க வில்லை.

காணாமற் போனோர் பிரச்சினை தொடக்கம், அரசியல் கைதிகளின் விவகாரம் வரை இன்னமும் தொடர்ந்து வருகின்றது. இவற்றுக்கெல்லாம் உரிய தீர்வு காணப்படவேண்டுமானால் அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் அமைய வேணடும். இதற்காக நீங்கள் உங்களது வாக்குகளை யானை சின்னத்திற்கு வழங்கவேண்டுமென்று ஐ.தே.க.வின் யாழ். மாவட்ட பிரதான வேட்பாளரும், முன்னாள்மகளிர் விவகார பிரதி அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.



## அரசியல் பலத்தைத் தரும் பட்சத்தில் குடிநீர் பிரச்சினையை தீர்க்க முடியும்

### டக்ளஸ் நம்பிக்கை



தீவக மக்கள் எமக்கு அரசியல் பலத்தை தரும் பட்சத்தில் தீவகத்திற்கான குடிநீர் பிரச்சினையை முற்றாக தீர்க்க முடியுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தீவகத்திற்கு தேர்தல் பரப்புரைக்காக சென்றிருந்த செயலாளர் நாயகம் புங்குடுதீவு மக்களை சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவக மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நாம் பல செயற்றிட்டங்களை கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தடையாக இருந்து வந்தனர்.

இந்த நிலையில், தீவக மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாயின் மக்கள் எமக்கு முழுமையான அரசியல் பலத்தை தர வேண்டும்.

அவ்வாறு மக்கள் எமக்கு அரசியல் பலத்தை தருகின்ற போது தீவக மக்களின் குடிநீர் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் முன்னுரிமையடிப்படையில் தீர்வுகளைப் பெற்றுத்தர முடியும்.

நாம் இரணைமடு குடிநர்த் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென விரும்பியிருந்த போதிலும் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டமைப்பினர் தடையாக இருந்தனர் என்றும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே புங்குடுதீவு மட்டுமல்ல தீவகத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் முகமாக பிரத்தியேக வகுப்புக்களுக்கு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, இங்கு புதியதொரு தரமான கல்வி நிலையத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்திலுள்ள பாரதி முன்பள்ளிக்கு செயலாளர் நாயகம் விஜயம் மேற்கொண்டார்.

இதேபோன்று புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் மக்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) உடனிருந்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்த வரை...

கிளிநொச்சியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை பல நோக்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தங்களது உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்வதற்கு நாட்டின் சகலருக்கும் உரிமை இருக்க வேண்டும். அந்த உரிமையை உச்ச பட்சமாக பாதுகாப்பதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமக்கு வாக்களித்த வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய சகல பகுதிகளையும் சேர்ந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு கடந்த ஆறு மாத காலப்பகுதியில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. எதிர் வரும் பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் புதிய அரசாங்கத்துடன் அந்த நிகழ்ச்சித் திட்டங்களை பலமாக முன்னெடுக்கவுள்ளது.

நாட்டில் எல்லோருக்கும் சமனான வசதிகள் உரித்தாக வேண்டும் என்றும், தெற்கைப்போன்று வடக்கு மக்களுக்கும் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்காலங்களில் அரசாங்கம் செயற்படுத்த உள்ள தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்காக வடக்கு விவசாய சமூகத்திடம் இருந்தும் விரிவான பங்களிப்பு ... கிடைக்குமெனதான் நம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கிளிநொச்சி இலங்கை பல நோக்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை திறந்து வைப்பதற்காக வருகை தந்த ஜனாதிபதி, அமைச்சர் ரிசாத் பதியுதீன் உள்ளிட்ட அதிதிகளுக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

பெயர் பலகையை திரைநீக்கம் செய்து விற்பனை நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களையும் பரிசீலனை செய்தார்.

கிளிநொச்சி நகருக்கு வருகை தந்திருந்த மக்களின் விபரங்களை கேட்டறிந்த ஜனாதிபதி அவர்களுடன் சிநேகபூர்வமாக அளவளாவியதையும் காணக்கூடியதாக இருந்தது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ...கியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-11)

## யாழ்.வந்தார்...

பாக போட்டியிடும் அங்கஜன் இராமநாதன் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

உலங்கு வானூர்தி மூலம் நேற்று காலை 11 மணியளவில் யாழுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி முற்பகல் 11.30 மணியளவில் கைலாசபிள்ளையார் கோவிலில் வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தார்.

ஆலயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் ஜனாதிபதியினை வரவேற்றிருந்தார்.

பின்பு விசேட வழிபாடுகள் நடைபெற்று அன்னதான வைபவமும் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து அங்கஜனது வீட்டுக்கு சென்று சந்திப்பிலும் ஈடுபட்டிருந்தார்.

பின்னர் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு சென்று சதொச விற்பனை நிலையத்தினையும் திறந்து வைத்தார். (எ-4)

## பாதுகாப்புப்...

ணிகளுடன் சென்றுள்ளனர்.

மேலும் ஒரு சிலர் மேல்சட்டை அணிந்தவாறு கோயில் உள்ளே பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர். இதனால் பொது மக்களிடையே விசனம் ஏற்பட்டிருந்தது.

பாதுகாப்பு பிரிவினர் கோவில் உள்ளே சப்பாத்து கால்களுடன் நிற்பதை படம்பிடித்த ஊடகவியலாளர் ஒருவரினை மிரட்டியதோடு படத்தை அழிக்குமாறும் கூறியுள்ளார்.

எனினும் அதற்கு மறுப்பு தெரிவித்த ஊடகவியலாளரின் ஊடக அடையாள அட்டையினை பறித்துச் சென்றுள்ளனர். பின்னர் ஜனாதிபதி செல்லும் நேரத்திலேயே அடையாள அட்டை அந்த ஊடகவியலாளரிடம் அவர்கள் மீள ஒப்படைத்தனர். (எ-4)

# மறைந்த அப்துல் கலாமுக்கு விளையாட்டு உலகம் இரங்கல்



இந்திய முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல்கலாம் நேற்று முன்தினம் காலமானார். அவரது மறைவையடுத்து, இந்திய விளையாட்டு வீரர்கள் பலரும், டுவிட்டரில் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது டுவிட்டர் பக்கத்தில், ஒரு உயர்ந்த மனிதரின் இழப்பால் இந்த தேசம் புலம்புகிறது. அவர் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி, அனைவருக்கும் அவர் ஒரு உத்வேகம் என கூறியுள்ளார். விவிஎஸ் லட்சுமணன் தனது டுவிட்டர் பக்கத்தில், மாணவர்களிடம் பேசுவது மற்றும் அவர்களுக்கு பயிற்றுவிப்பதை அப்துல் கலாம் விரும்பினார். அவர் விரும்பியதை செய்து கொண்டிருந்த போது காலமானார் என கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் அனுராக் தாக்கூர், "மக்களின் ஜனாதிபதியான அப்துல் கலாம், ஒரு அறிவாளி. நம்ப முடியாத ஒரு சிறந்த மனிதர். ஒரு உயரிய இந்தியரை நாம் இழந்துள்ளோம்," என கூறியுள்ளார்.

இளம் கிரிக்கெட் வீரர் லோகேஷ் ராகுல், அப்துல் கலாமின் திடீர் மறைவு பற்றி அறிந்து வருந்துகிறேன். அவரது ஆன்மா சாந்தி அடையட்டும் என்றுள்ளார். ஸ்ரீசாந்த் தனது டுவிட்டர் பக்கத்தில், "நாட்டிற்கு சோகமான நாள். நான் உள்பட ஏராளமான மக்களுக்கு ஊக்கமளிப்பவராக இருந்தவர். நான் படித்ததில், அவரது புத்தகங்கள் சிறந்தவை.

சூரியனை போன்று பிரகாசிக்க வேண்டும் என்றால், சூரியனை போல் சுட்டெரிக்க வேண்டும் என்பது அவரின் புகழ்பெற்ற வார்த்தைகள்," என்றார். சுழற்பந்து ஜாம்பவான் அனில் கும்ளே, நாட்டுக்கு இது ஒரு பெரிய இழப்பு என்றுள்ளார். இதேபோல் இந்திய கிரிக்கெட் வீராங்கனை அஞ்சும் சோப்ரா, டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, பேட்மின்டன் வீராங்கனை ஜுவாலா கட்டா, கார் பந்தய வீரர் கருண் சந்தோக் ஆகியோரும டுவிட்டரில் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

விராட் ஹோலி:அப்துல்கலாம் பலருக்கும் முன் மாதிரியாக விளங்கிய தொலை நோக்கு பார்வை கொண்ட ஒரு தலைவர். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

அஸ்வின்:இந்தியாவுக்கு மிக சோகமான நாள். 2020 கனவை நிறைவேற்றுவது தான், கலாமின் ஆத்மாவுக்கு நாம் அளிக்கும் பரி சாக இருக்க முடியும். சுயநலமற்ற ஒரு ஆத்மாவாக விளங்கியதற்கு நன்றிகள் சேர். கலாம ஆத்மா சாந்தியடையட்டும்.

சுரேஷ் ரெய்னா:ஆத்மா சாந்தியடையட்டும் என்று குறிப்பிட்டு "வருங்கால சந்ததிகளையும் ஈர்த்தமைக்காக நன்றி. நாங்கள் உங்களை மிஸ் செய்கிறோம் அப்துல் கலாம்" என்ற வாசகம் அடங்கிய புகைப்படத்தை பதிவு செய்துள்ளார்.

இஷாந்த் ஷர்மா:இந்தியா குறித்து முன் மாதிரியான கனவை வைத்திருந்த அப்துல் கலாம் சாரின் ஆத்மா சாந்தியடையட்டும் என பிரபலங்கள் தமது இரங்கலை தெரிவித்துள்ளனர். (க)

## அப்துல்...

புதியதொரு யுகத்துக்கு அழைத்துச் சென்ற தலைசிறந்த மனிதர். அவர் மௌனித்துவிட்டார். ஆனாலும் எப்போதும் எமக்கு முன்னுதாரணமாயிருப்பார் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## காணாமல்...

சம்பவங்கள் தொடர்பாகவே, இந்த விசாரணைக்குழு விசாரிக்கவுள்ளது.

ஓய்வுபெற்ற நீதிச் சேவை அதிகாரி இந்த விசாரணைகளை மேற்பார்வை செய்வார் என்றும், காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலர் தெரிவித்துள்ளார். (எ-11)

## மீளக்குடி...

வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் குடும்பங்களின் விபரங்கள் பிரதேச செயலர் ஊடாக பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

அத்துடன் சொந்த முயற்சியில் குடி யேறியவர்களும் தமது விபரங்களை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (எ-9)

# ஒற்றை ஆட்சியின் கீழ் மக்களின் உரிமை காக்கப்படும்

## ஐ.ம.சு.கூ தேர்தல் அறிக்கை



(கொழும்பு)

ஒற்றை ஆட்சியின் கீழ் சகல இன மக்களினதும் உரிமைகளையும் காக்கும் வகையில் இனப் பிரச்சினைக்கு தீர்வுபெற்றுக் கொடுக்கப்படுமென்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டது.

இதன்படி, அரசியல் யாப்பின் 13வது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்லாத வகையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளை பலப்படுத்தக்கூடிய தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்படும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள், இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் ஆறு மாதங்களுக்குள் தீர்வு முன்வைக்கப்படுமென்றும் அந்த தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவொன்று ஸ்தாபிக்கப்படும் என நேற்று வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நல்லிணக்க ஆணைக் குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள் ஒரு வருடத்துக்குள் நிறைவேற்றப்படுமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்களுக்கு பாரிய நஷ்டத்தை ஏற்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி பத்திர விற்பனை தொடர்பில் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு தகுந்த தண்டனை பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, பேசிய முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ, தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்படும் என தெரிவித்தார்.

அத்தோடு, 20ஆவது திருத்த சட்டத்தை நிறைவேற்றுவோம் என்றும் தகவல் அறியும் சுதந்திரத்தை பாதுகாப்போம் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேஸ்டின் ஓபன் டென்னிஸ் ஆஸி வீராங்கனை சமந்தா சம்பியன்



பேட் கேஸ்டின் டபிள்யூ டிஏ டென்னிஸ் போட்டியில் அவுஸ்திரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர் சம்பியன் பட்டம் வென்றார்.

ஆஸ்திரியாவின் பேட் கேஸ்டின்நகரில்கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சமந்தா 3-6, 7-6 (3), 6-2 என்ற செட் கணக்கில் இத்தாலியின் கரின் நாப்பை தோற்கடித்தார்.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 3-6 என்ற கணக்கில் இழந்த சமந்தா, பின்னர் நடைபெற்ற 2-வது செட்டில் அபாரமாக ஆடினார்.

மறுமுனையில்நாப்விடாப்பிடியாக போராட, அந்த செட் டைபிரேக்கர் வரை சென்றது.

அதிலும் கடுமையாகப் போராடிய சமந்தா 7-6 (2) என அந்த செட்டை கைப்பற்றினார்.

இதையடுத்து வெற்றியைத் தீர்மானிக்கும் 3 ஆவது செட் நடைபெற்றது.

அதில் ஆரம்பம் முதலே அசத்தலாக ஆடிய சமந்தா, அந்த செட்டை 6-2 என கைப்பற்றி சாம்பியன் ஆனார். இது அவர் வென்ற 8-வது சம்பியன் பட்டமாகும்.

வெற்றி குறித்துப் பேசிய சமந்தா, இந்த இறுதி ஆட்டம் மிகக் கடுமையான ஆட்டமாகும்.

முதல் செட்டில் முற்றிலுமாக நான் வீழ்த்தப்பட்டேன்.

2 ஆவது செட்டில் நாப் அபாரமாக ஆடியபோதும், நான் கொஞ்சம் சிறப்பாக ஆடுவது போன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

2 ஆவது செட்டில் ஒரு கட்டத்தில் இக்கட்டான சூழலில் இருந்து மீண்ட பிறகு சிறப்பாக ஆட ஆரம்பித்தேன்.

மழை காரணமாக என்னுடைய அரையிறுதி ஆட்டம் ஒத்தி வைக்கப்பட்டதால், அரையிறுதி, இறுதியாட்டம் என இரண்டையும் ஒரே நாளில் ஆடவேண்டிய நிலை ஏற்பட்டது.

காலையில் இரண்டரை மணி நேரம் விளையாடி விட்டு, பிற்பகலில் மீண்டும் இரண்டரை மணி நேரம் விளையாட வேண்டியதிருந்ததால் கடினமாக இருந்தது என்றார். (க)

## யாழ்.விருது - 2015...

வழங்கப்படுவதாக யாழ்.மாநகரசபையின் ஆணையாளரும், சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவின் மகாசபை நேற்றையதினம் ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் யாழ். மாநகர சபை மண்டபத்தில் கூடியபோது,

2015ஆம் ஆண்டுக்கான யாழ்.விருதை பேராசிரியர் க.தேவராஜாவிற்கு வழக்குவதென ஏகமனதாக முடிவுசெய்தது.

சமூக, சமயப் பணிகளில் அதீத ஈடுபாடு கொண்ட பேராசிரியர் க.தேவராஜா அவர்கள் இணுவில் மண்ணில் சைவப் பண்பாடும் பாரம்பரியமும் கட்டிக்காக்கப்படுவதற்கு உறுதுணையாக இருந்து வருபவர்.

கல்வி கற்பதற்கு வசதியற்ற மாணவர்களுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் பேராசிரியர் தேவராஜாவின் வகிபங்கு பலராலும் போற்றப்பட்டுள்ளது.

இணுவில் பொது நூலகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்து பொது நூலகத்தினூடாக மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதில் பேராசிரியர் க.தேவராஜா ஆற்றிவரும் பங்கு முக்கியமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தில் அனைவரதும் மதிப்புக்குரியவராக விளங்கும் பேராசிரியர் தேவராஜா அவர்கள் வணிக பீடத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கான யாழ். விருது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டின் போது வழங்கப்படும் என ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடத்துக்கான யாழ்.விருது சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## தபால் திணைக்களத்திடம் ...

அட்டைகளை விநியோகிக்கவுள்ளதாக தபால்மாஅதிபர் ரோஹன அபேரத்ன கூறியுள்ளார்.

ஆகஸ்ட் மாதம் இரண்டாம் மற்றும் ஒன்பதாம் திகதிகள் வாக்காளர் அட்டை விநியோகத்திற்கான விசேட தினங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கான பகுதிநேர வகுப்புக்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை இன்று நள்ளிரவுக்கு பின்னர் நடத்தக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை செப்டெம்பர் மாதம் எட்டாம் திகதி வரை அமுலில் இருக்கும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 197 ஆக அதிகரித்துள்ளதென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய சட்ட மீறல்கள் தொடர்பில் 156 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார். (எ-11)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org